மகாத்மா காந்தி அடிகள்.

கலா சிந்தாமணி

புத்தகம் சு 6

“ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு ” —திருக்குறள்.

பகுதி ரு 5

திருமுருகாற்றுப்படை

[உ—திருச்சீரலைவாய்]

(99-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஐந்தாவது திருமுகம் தம் திரு உள்ளத்து தேவரும் அசுரரும் சமம் எனும் நடுவு நிலைமையைப் போக்கி தீங்கிழைக்கும் பகைவராகிய கொடிய அன்பில்லாத வலிய அவுணர்கள் தோன்றுந்தோறும் அவர்கள்தோன்றுவண்ணம் அவர்களைக் கொன்று அறப் போக்க வேண்டுமென கோபங்கொண்ட உள்ளத்தோடே போர்க்களத்தை விரும்பியுள்ளது ஒரு திருமுகம்.

ஆறுவது திருமுகம் தினைப்புலமாகிய அடியவர்கள் உளத்து யாதொரு துன்பமும் உண்டாகாவண்ணம் காத்தருளக் குறவர் குடியிற்றோன்றிய அறியாமையையுடைய, மகளாகிய கொடிபோன்ற இடையினையுடைய வள்ளி எனும் நாயகியுடனே அன்பர்கட்கு அருள்புரிந்து அவள் மகிழவும், அன்பர்கள் மகிழ்ச்சியுறவும், பொருந்தி விளங்கும் ஒரு திருமுகம்

“ நகையமர்ந்தன்று ” என்றது திருமுருகக் கடவுளும் வள்ளித் திருநாயகியும் காம நுகர்ச்சியால் மகிழ்வதால் இல்வாழ்வார்கள் தங்கள் நல்வாழ்க்கையை நடாத்துதற்கு திருநாயகனும் திருநாயகியும் மகிழ்ந்து நகையமர்ந்ததால் மகிழ்வர் என்றது. முன்கூறிய மூவிருமுகங்களும் தம்தம் தொழிலினிடத்துச் செய்யும் முறைமைகளைச் செவ்வனே பயின்று நடத்துகையினாலே அம்முகங்கள் ஆறும் இயற்றும் திருவருட் செயற்குப் பொருந்த அவர் தம் பன்னிரண்டு திருக்கரங்களும் இயற்றுந் தொழில்களாவன :—

உயர்ந்த பொன்னாற் செய்த ஆரந்தாங்கிய அழகினையுடைய பெருமையான திருமார்பினிடத்து விளங்குகின்ற உயர்ந்த இலக்கணம் பொருந்திய சிவந்த மூன்று வரியினையும் தன்னிடத்தே வந்து விழும்படி வாங்கிக்கொண்ட தோள்; சுடரையுடைய படைக்கலங்களையெறிந்து பகைவர்களுடைய மார்பைப் பிளக்குந் தன்மைத்தான ஆயுதங்களைத் திரும்பி வாங்குவதுமான இத்தோள் நிறைந்து நிமிர்ந்து விளங்கும் பன்னிரு திருக்கரங்களையும் உடையது.

அப்பன்னிரு திருக்கரங்களில் :—

ஒன்று ஆறுமாமுகன் திருநாமத்தை எக்காலத்தும் மறவாது அன்புநிறைந்த

உள்ளத்தவராயும் தாம் வழிபடும் முறைமையில் தினையளவும் வழுவாத கொள்கை உடையவர்களாயும் ஆகாயத்தே சஞ்சரிக்கும் முறைமையை உடைய தெய்வ இருடிகட்கும் விண்கண் உள்ளார்க்கும் பாதுகாவலாக தூக்கிய திருக்கரம் ஒன்று.

இரண்டாந் திருக்கரம் அப்படித் தூக்கி இருக்கும் அந்த திருக்கரத்திற்கு துணையாக மருங்கில் வைத்தது ஒரு திருக்கரம். எனவே ஞாயிற்றின் வெம்மையைப் பல்லுயிரும் பொறுத்தலாற்றாவெனக் கருதி தமதருளினால் அச்சுடரொடு திரிந்து ஞாயிற்றின் வெம்மையைப் பொறுக்கின்ற முனிவரைப் பாதுகாத்தலால் உலகத்தைத் தாங்கி காத்ததாயிற்று. எனவே இத் திருக்கரங்கள் "மாயிருள்ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்த" முகத்திற்கு ஏற்ற தொழில் செய்வதாயிற்று.

மூன்றாந் திருக்கரம் அன்பர்களுக்கு அருள்புரியத் தான் இவர்ந்தருளி வரும் வேழத்தைச் செலுத்துங் கருவியான தோட்டியைச் செலுத்தா நிற்கும்.

நான்காந் திருக்கரம் மற்றொன்று, செம்மைநிறம்பெற்ற நல்ல ஆடையைத் தரித்துள்ள தன் தொடையின்மிசை அசைந்து விளங்கும்; எனவே தன்னை வழிபடுவார்க்குத் திருவருள் புரிய எழுந்தருளுங்கால் வேழத்தின்மிசை இவர்ந்தருளுதல் இயல்பாதலால் இத்திருக்கரங்கள் இரண்டும் காதலினுவந்து வரங்கொடுத்தருளும் திருமுகத்திற்கேற்ற தொழிலைச் செய்வதாயின.

ஐந்து, ஆறாந் திருக்கரங்கள் வியப்பையும் கருமை நிறத்தையும் உடைய கேடகத்தையும், வேலாயுதத்தையும் வலமாகச் சுழற்றும் இயல்புடையவை. எனவே இத்திருக்கரங்கள் இரண்டும் அந்தணர்களால் இயற்றப்படும் வேதவேள்விகளை அவுணர்களால் யாதொரு இடையூறும் உறாவண்ணம் அவுணர்களை ஓட்டுதற்கு தம் கரிய கேடயத்தையும் கூரிய வேலாயுதத்தையும் வலமாகச் சுழற்றுதலால் "மந்திரவிதியின் மரபுளிவழாது அந்தணர் வேள்வி ஓர்க்கும்" திருமுகத்திற்கேற்ற தொழிலைச் செய்வதாயின.

ஏழு, எட்டாந்திருக்கரங்கள் தேவர்கட்கும் முனிவர்கட்கும் வேதசாஸ்திரங்களில் மறைந்து விளங்கும் உரையிறந்த வேதப் பொருள்களை அவர்கட்கு உபதேசித்து உணர்த்துங் காலத்து ஒரு திருக்கரம் தம் அழகிய மார்போடே விளங்கவும், மற்றொன்று, தம் திருமார்பில் அணிந்து விளங்கும் நீண்டு தாழ்ந்த திருமாலையோடே தாழ்ந்து அழகுபெற அசையும்; எனவே, "மோன முத்திரை அத்தனாய்" உபதேசிக்குங்குறியை உடைய குருநாதனாய் விளங்குதலால் "எஞ்சிய பொருள்களை ஏமுறநாடித் திங்கள்போல திசை விளக்கும்" திருமுகத்திற்கு ஏற்ற தொழிலைச் செய்வதாயின.

ஒன்பது, பத்தாந் திருக்கரங்கள் ஒரு திருக்கரம் தொடியொடு (தொடி-கைக் கங்கணம்) வீர கங்கணத்தை அணிந்து விண்ணளாவிச் சென்று சுழன்று விண்கண் இடையூறியற்றும் அவுணர்களை அழிக்கும். மற்ற திருக்கரம், கீழ்நோக்கித் தாழ்ந்து இனிய ஓசையோடு ஒலிக்கின்ற ஓசையை உடைய மணியை மாறி மாறி ஒலிக்கப்பண்ணுதலால் மண்மிசை இருடிகள் இயற்றும் வேதவேள்விகட்கு இடையூறு வராவண்ணம் இருடிகட்குப் பாதுகாவலாக உளது. எனவே, "செறுநர்த் தேய்த்துச் செல் சமமுருக்கிக், கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்ட" திருமுகத்திற்கேற்ற தொழில் செய்வதாயின.

பதினொன்று, பன்னிரண்டாந் திருக்கரங்கள் நீலநிறத்தையுடைய வானத்தினின்று வளப்பம் மிகுந்த மிக்க மழையை மண்மிசைப் பொழியச்செய்து அதனால் இல்வாழ்வார்களும் இருடிகளும், மற்றும் புல், பூண்டு, மிருகாதிகளும், செவ்வனே உயிர் வாழச் செய்விக்கும், ஒரு திருக்கரம். தெய்வமகளிர்களான தெய்வயானை நாயகியும், வள்ளித் திருநாயகியும் மகிழ்ச்சியுற திருமணமாலையைச் சூட்டிற்று மற்றொன்று. இல்வாழ்

வார்கள் தங்கள் வாழ்க்கை நலங்களைத் தேடுதற்கு இன்றியமையாத திருமண மாலையைச்சூட்டிப் பெண்களைக்கொண்டு நல்லறத்தை இல்லறத்தால் விளக்குதல் என்பதை விளக்குகின்றது. எனவே "குறவர் மடமகள் கொடிபோனுசுப் பின் மடவரல் வள்ளியொடு நகையமர்ந்த" திருமுகத்திற்கு ஏற்ற தொழிலைச் செய்வதாயிற்று. ஆறுமுகப் பெருமான் தன் ஆறு திருமுகங்களும் இயற்றும் திருவருட்செயற்கு ஏற்றவாறும் தம் மனத்துள் விரும்பிய விருப்பமும் தாம் கொண்ட அழகிய பன்னிரண்டு திருக்கரங்களால் செய்யும் தொழிலும் ஒன்றற்கொன்று சிறிதளவும் மாறுபாடு கொளாது ஒக்க அமைந்திருத்தல் அவர் அடியார்கள் பெறும் இன்பப் பேற்றிற்கே.

. திருமுருகப் பெருமான் அடியவர்கட்குத் திருவருள் புரிய எழுந்தருளி வருங் காலத்து ஆறுதிருமுகமும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு சீரிய வேழத்தின்மிசை இவர்ந்து ஆகாயத்தின் வழியே எழுந்தருளுங் காலத்து துந்துபி முதலதாகிய நன் மங்கள வாத்தியங்கள் பல ஒலிக்கவும், திண்ணிய வயிரங்கொண்ட மூங்கிற் கொம்பினுல் ஆக்கப்பட்ட ஊதுகுழல் மிகுந்த ஒலியைத் தரவும், வெள்ளிய சங்கவாத்திய மானது உயர்ந்த ஓசையைத் தரவும், இரண்டு பெரிய மேகக் கூட்டங்கள் ஒன்று சேருங்கால் உண்டாகும் ஒலியை உடைய இடியைப் போன்ற நிறைந்த முழக்கத்தைத் தரவல்ல முரசம் எனும் வாத்தியம் பரந்த வானத்தே நிரம்ப பேரொளியைத் தரவும், பல புள்ளிகளையுடைய மயிலானது திருமுருகக் கடவுளின் ஆணையினுலும், அடியவர்கள் உய்யவும், அவுணர்களின் கூட்டம் முற்றும் அறப்போக்கித் தாம் கொண்ட வெற்றியால் உயர எடுத்த தம் அழகிய கொடியில் அவுணர்களில் எஞ்சிய சூரபத்மன் எ பான் மயில்கோழியாகவும் உருவெடுத்து சரண் அடைய இம்மயிலானது முருகக்கடவுளின் திருக்கொடியில் தங்கி இருந்து தான் ஆறுமுகப்பெருமான் திருவருள்பெற்றேன்! உய்ந்தேன்!! என உவப்பினுல் உரத்த குரலுடன் ஒலிக்கும் ஓசையும் தம்மிருமருங்கும் புடை சூழவரும் கணங்களோடும் ஆகாயத்தின் வழியே வேழத்தின் மிசை எழுந்தருளி நன்மையான பல குணங்கள் கொண்ட நன் மக்கள் பலர் குழுமி வாழும் தலமாயும், மேன்மக்கள் பலவாறு புகழ்ந்த நல்ல சிறப்பினையுடைய உயர்ந்து மிகுந்த புகழினையுடைய திருச்சீரலைவாய் எனும் திருப்பதியில் தெய்வயானை, வள்ளி நாயகிகள் இருவரும் இருமருங்கில் வீற்றிருக்கவும், மகிழவும், நன்மக்கள் உய்யவும் என்றும் நீங்காது அமர்ந்தருளி இருத்தலும் ஆறுமுகக் கடவுளின் உயர்ந்த உரிமையாகும். என நக்கீரர் எனும் புலவர் பெருமான், ஆறுமாமுகப் பெருமான் திருவருளைப் பெறுவான் வந்த ஓர் இரவலற்கு கூறியது.

இரண்டாம் படை முற்றும்.

கா. அ. நடேச செட்டியார்.

புகழ்பட வாழ்தல்

(105-ம் பக்கத் தொடர்ச்சி)

"பெரியோர் தமது வாய்களாலே தம் புகழ்களை ஒருகாலமும் எடுத்துச் சொல்லார். பெரியோரிடத்திலே தம்மைப் புகழ்தலிலே சாமர்த்தியஞ் சிறிதும் இல்லை. சிறியோர் தமது வாய்களாலே தமது புகழ்களை எங்கும் எடுத்துச் சொல்லுவர். சிறியோரிடத்திலே தம்மைப் புகழ்தலிலே சாமர்த்தியம் பெரிதும் உண்டு. பெரியோருடைய புகழ்களை எடுத்துச் சொல்லுவதற்கு உலகத்திலே பலருளர். சிறியோருடைய புகழை எடுத்துச் சொல்லுதற்கு உலகத்திலே ஒருவருமில்லை. அதனுலே அவர் தாமே தம்புகழை எடுத்துச் சொல்வாராயினர்."

இப்படியே சாத்தகி தற்புகழ்ச்சியை மறுத்துரைத்தனர். தற்புகழ்ச்சியின்மையும் புகழ்பட வாழ்தற்குக் காரணமாகும்.

சுன்னுகம் அ. குமாரசுவாமி பிள்ளை.

ஸ்ரீ கச்சிக் கலாவல்லித் தமிழ்ச் சங்கத்தாரது அபிப்பிராயம்.

ஐயா! தாங்கள் அனுப்பிய பத்திரிகை இன்று எங்கள் பார்வைக்கு விடப்பட்டது. கண்ணுற்ற நாங்கள் மிகுந்த திருப்தி யடைகின்றோம். பத்திரிகையில் எங்கு பார்த்தபோதிலும் சைவ மணங் கமழ்தலும், சாஸ்திராம்சங்கள் நிலவுதலும், சான்றோராட்சி விளங்குதலுமாகவே இருக்கின்றன. இப் பத்திரிகையில் தமிழிற்காகவே ஓர்பாகம் விடப்பட்டிருத்தலை நோக்கின் இது தமிழின்மாட்டு மிக்க பற்றுகொண்டுள்ளதென நன்கு விளங்கும். இப்பிரிவின்கண் தமிழது ஆதிசரித்திரமும், தற்கால நிலையும் நன்கு விளக்கப் படுகின்றன. இப்பத்திரிகை நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றதென் றறிகின்றோம். பொதுவாக உலகம் எப்படிப் பட்டதென்றும், உலகில் உள்ளபொருள்கள் இன்னவை என்றும், உலகில் உள்ள ஆன்மா சிறியதாயினும் பெரியதாயினும் தேவசேவை செய்யவேண்டுமென்றும், அவற்றிற்குச் சாதனங்கள் இன்னின்னவை யென்றும் நன்கு முதற்பாகத்தில் விளக்கப் படுகின்றது. இவைகளை யெல்லாம் உணர்தற்கு ஞானம் அவசிய மென்றும், அந்த ஞானம் ஆன்றோர் நூற்களை ஆராய்தலின் அடையக் கூடியதென்றும், அந்த நூற்களுந் தமிழ் நூற்களா யிருத்தல் வேண்டு மென்றும் இரண்டாவது பாகம் விளக்குகின்றது. பின்னர் அக்கல்வியைக் கற்போர் மாணவர்களென்றும் அவர்கள் இன்னின்ன லட்சணத்தோடு கூடி இருத்தல்வேண்டு மென்றும், சிறுவர்கள் கற்கவேண்டிய பழமொழிகள் இன்னவை யென்றும் மூன்றுவது பிரிவில் உணர்த்தப் படுகின்றது. கடையில் அம்மாணவர்கள் என்போர் ஆண்மாத்திர மல்லவென்றும், பெண்களும் அத்தியாவசியமாகக் கற்கவேண்டுமென்றும், அவர்கள் கற்கவேண்டிய விஷயங்கள் ஆண்களின் வேறுபட் டிருக்கின்றனவென்றும், அவைகள்தா மின்னின்னவை யென்றுங் கடைசிபிரிவாகிய ஸ்திரீகள் பிரிவில் விளக்கப் படுகின்றன. என்னவே இப்பத்திரிகை சைவர்கட்கும், தமிழின்மாட்டு பற்றுடையோர்க்கும் அத்தியாவசியமாகும். அன்பர்கள் கண்டு அதன் பெருமையை யறிவார்களாக. பத்திரிகை நீடித்தோங்க ஈசன் அருள்புரிந்திடுக.

பி. சே. மாணிக்கம்,
சங்கக் காரியதரிசி.

நிருபம்.

ஸ்ரீமான் மாணிக்கவேல் முதலியாரவர்கட்கு—காஞ்சிபுரம் ஸ்ரீ கச்சிக்கலாவல்லித் தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனர் ஸ்ரீமான் சிவஸ்வாமி தேசிகரவர்கட்குத் தாங்கள் அனுப்பிய கடிதமும் கலாசிந்தாமணிப் பத்திரிகையும்சென்றபுதனன்று சங்கத்திற் கூடிய நிர்வாக சபைக்குக் கொண்டுவரப்பட்டன. பின்னர் தேசிகரவர்கள் கடிதத்தைச் சபையோர்க்கு வாசித்துக் காட்டியதுமன்றி அடிக்கடி விஷயதானஞ் செய்யுமாறுமென்னைப் பணித்திருத்தலின் கூடிய சீக்கிரம் விஷயம் எழுதியனுப்புகின்றேன். இப்பொழுது யான் சென்னைக்கு வந்திருத்தலின் கூடுமானால் எழுதி நேரிலேயே கொடுத்துவிட்டுப் போகின்றேன். நாளை இரவு காஞ்சிக்குப் போக உத்தேசம். கலாசிந்தாமணிப் பத்திரிகை நிர்வாகசபையினரது பார்வைக்கு விடப்பட்டது. பத்திரிகை சங்கத்திற்கும் வரவழைக்கப்படல் வேண்டுமென்னுந் தீர்மானம் என்னால் கொண்டுவரப்பட்டு யாவராலும் அங்கீகாரஞ் செய்யப்பட்டது. சந்தா இவ்வளவெனத் தெரிவித்திடுக. சிரமந் தருதற்காக மன்னிக்கப் பிரார்த்திக்கின்றேன். இப்பொழுது நடந்துவரும் பத்திரிகைகளுள் கலா சிந்தாமணி மிக்க சிறந்த பத்திரிகை எனவுஞ் சொல்லுவேன். நுண்ணிய விஷயங்கள் பொதிந்துள்ளன வெனச் சொல்லுதல் மிகையாகாது. வளர்பிறைபோன்று தினந்தோறும் வளருமாறு ஈசன் இன்னருள் புரியப் பிரார்த்திக்கின்றனன். சுபம்!

பி. சே. மாணிக்க முதலியார்.

உமாபதி சிவாச்சாரியார் சரித்திரம்

'குறைவிலருள் ஞானமுதல் கொற்றங் குடி [யடிகள்
நறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப [தெந்நாளோ'

உமாபதி சிவாச்சாரியார் சைவசித்தாந்த சந்தான-குரவர் நால்வருள் ஒருவரும் தில்லைவாழந்தணர்களுள் ஒருவருமாவர். இவர் சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன் குடியில் வசித்தமையால் கொற்றங்குடிமுதலியார் எனப்பட்டார். இப்பெரியார் வேதசிவாகமங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்தவர்; தமிழிற் புலமை வாய்ந்தவர்; சிவபத்தியிலும் அடியார் பத்தியிலுஞ் சிறந்தவர்.

ஒருநாள் இவர் நடராஜப் பெருமானைப் பூஜித்துத் திரும்பும்போது இவருக்கு அக்காலத்தில் ஏற்பட்ட சிவிகை, தீவர்த்தி முதலான விருதுகளுடன் சென்றனர். இவரது ஆடம்பரத்தைக் கண்ட திருப்பெண்ணாகடம் மறைஞான சம்பந்தர் "பட்டகட்டையிற் பகற்குருடன் போகின்றான் பாருங்கள்" என்று குறிப்பாகக் கூறினர். இதனைக்கேட்ட சுவாமிகள் உடனே சிவிகையை விட்டிறங்கி மறைஞான சம்பந்தரை வணங்கி அவர் வழி ஒழுகுவாராயினர். மறைஞான சம்பந்தர் சுவாமிகளது அதிதீவிர பக்குவத்தை உலகினர்க்கு வெளிப்படுத்துவான் கருதி ஒருநாள் துணி நெய்பவர் வீதியையடைந்து அவர்களது நூற்பாவிலிருந்து கீழே சிந்தும் கூழை வாங்கியுண்டனர். அவர் உண்ணுங்கால் தம் முழங்கை வழியே ஒழுகும் சேடத்தை அருகே யிருந்த உமாபதியார் ஏற்றுப் பேரானந்தத்துடன் பருகினர்.

இச்செயற்கருஞ் செய்கையை அறிந்த மற்றைத் தில்லைவாழந்தணர்கள் சுவாமிகளது நிலைமை நன்குணராது அவரைப் பழித்தனரென்றும் சுவாமிகள் நடேசப் பெருமானைப் பூசிக்கவொட்டாதபடி தடுத்தன ரென்றும் கதை வழங்குகின்றது.

சுவாமிகளிடம் தெய்வீகம் விளங்கிய தென்பதற்குப் பின் வரும் சரிதங்கள் சான்று பகரும்:—

(1) பெற்றான் சாம்பான் என்னும் சிவபக்த சிரோமணிக்கு சபாநாயகரது "அடியார்க் கெளியன்" என்னும் திருமுகப்படி சிவதீக்ஷை செய்வித்து முத்தி கொடுத் தருளினமையும், பின்பு அப் பெற்றான் சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோரும் காண பரிபக்குவ முற்றிருந்த ஒரு முள்ளிச் செடிக்கு முக்தி கொடுத்தருளினமையும்,

(2) மார்கழிமாதத் திருவிழா ஒன்றிலே ஏறாதுநின்ற கொடியை "கொடிக்கவி" என்னும் பிரபந்தம் பாடி ஏறச் செய்தமையும்,

(3) இவர் இயற்றியருளிய சிதம்பர மான்மியமாகிய கோயிற்புராணம் அரங்கேற்றமுறாது பேடகத்தின் இருப்பதாகச் சபாநாத வள்ளலார் தில்லைவாழந்தணர்களுக்கு அறிவிக்க அவர்கள் இவரிடம்வந்து புராணத்தை அரங்கேற்றச் செய்தமையும்.

இயற்றிய நூல்கள்:—மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் சுவாமிகளால் இயற்றப்பட்டன எட்டு நூல்கள். அவை சித்தாந்த அஷ்டாங்கமென்று வழங்கப்படுகின்றன. அவற்றுள் சிவப்பிரகாசம் விரிந்தது, திருவருட்பயன் மிகச் சுருங்கியது, சங்கற்ப நிராகரணம் பெயருக்கேற்ப மற்றைய மதங்களின் கொள்கைகளை நிராகரித்துச் சைவசித்தாந்தத்தை நிலவுவது. ஏனைய ஆங்காங்கே சித்தாந்தக் கருத்துகளை விளக்குவன. இவரியற்றிய பிற நூல்கள்:—கோயிற் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், சேக்கிழார் புராணம், திருமறை கண்ட

புராணம், திருப்பதிக் கோவை, திருப்பதிகக் கோவை, பௌட்கராகம வடமொழி வியாக்கியானம் முதலியன.

காலம் முதலியன:—(1) சுவாமிகள் இற்றைக்கு 600-வருடங்களுக்கு முன் விளங்கியவர் என்பது அவர்கள் இயற்றிய சங்கற்ப நிராகரணத்தால் அறியக் கிடக்கின்றது.

(2) மாணுக்கர் நமச்சிவாய தேசிகர் முதலியோர். இவரே திருவாவடுதுறை மடத்தைத் தாபித்தவர். (3) சுவாமிகள் பரிபூரண முற்றதினம் சித்திரை அத்தம். (4) சுவாமிகளது திருக்கோயில் சிதம்பரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள கொற்றவன்குடி என்னும் சிறு கிராமத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை.

ஈகை

ஈகை யென்பதில் ஈ-பகுதி கை-விகுதி பெற்ற தொழிற் பெயர். ஈகையாவது வறியவராய் இரந்தவர்க்கு இல்லை யென்னுமற் கொடுத்தல்.

'வறியார்க்கொன்றீவதே யீகைமற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து.'

என்று செந்நாப் போதார் பொய்யாமொழியில் நவின்றுள்ளபடி, ஒருபொருளும் இல்லாதார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பதென்றும், அங்ஙனம் அவருக்குக் கொடுத்தலாவது, அஃதொழிந்த எல்லாக் கொடையும் குறியெதிர்ப்பைக் கொடுக்கும் நீர்மையை யுடைத்து என்றும் அறியவேண்டும்.

ஈகையாவது இம்மைக்குப் புகழையும், மறுமைக்குப் புண்ணியத்தையும் தவறாமல் விளைத்தலினால், இப்பரதகண்டத்தின்கண் அடைதற்கரிய மானிடப் பிறவியை எடுத்த நம்மனோர்க் குரிய மேலான குணங்களுள் ஈகையென்பதும் ஒன்று.

தமக்குச் செல்வம் இல்லாமற் போன காலத்தும், தம்மாற் கூடியமட்டில் செல்வம் உள்ள காலத்திற்போல, இரப்பவர் வருகைக்கு உவந்து சாந்தமாகப் பேசிக் கொடுத்தலோடு கூடிய நற்குணமுள்ள மாந்தர்க்கு மேலுலகத்தவர் தம் உலகத்துக் கதவைத் திறந்து வைப்பர். இதனால் தானம் செய்பவர்க்கு மறுமைப் பயன் தவிராது சித்திக்கும் என்பதாக நம்முன்னோர்கள் கூறியிருக்கின்றனர்.

'நட்டார்க்கு நள்ளாதவர்க்கு நாளவரையா
லட்டது பாத்துண்ட லட்டுண்ட—லட்ட
தடைத்திருந் துண்டொழுகு மாவதின்மாக்
கடைக்குமா மாண்டைக் கதவு." [கட்

என்று, நாலடியாரில் கூறியுள்ளபடி, தம்மோடு நட்புக் கொண்டார்க்கும் நட்புக்கொள்ளாதவர்க்கும், அளவிற்கு ஏற்பச் சமையல் செய்த உணவைப் பங்கிட்டுக் கொடுத்துப் பின்பு தாமுண்ணுதல் ஈகையாகும். அங்ஙனமின்றித் தம் வீட்டினுள் எவரும் வரவொண்ணுதபடி வாயிற் கதவை மூடித் தாம் உள்ளே இருந்து புசித்துண்ணும், பயனில்லாத மனிதர்களுக்கு மேலுலகத்தின் கதவு மூடப் பட்டிருக்கும் என்பது இதன் பொருள்.

இவ்வுலகின்கண் ;

'மண்ணுர்சட்டி கரத்தேந்தி மாநாய் கவ்வும் [காலினராய்
அண்ணுந் தேங்கித் திரிவாரை யறிந்தோ [மறிந்தோ மம்மம்மா
பண்ணுர் மொழியார் பாலடிசில் பைம்பொற் [கலத்திற் பரிந்தூட்ட
உண்ணுநின்ற வொருவர்க் குதவா மாந்த [ரிவர்தாமே.'

என்று விவேகசிந்தாமணியில் கூறியுள்ளபடி ஈகையில்லாதவர்களும், தான் சாப

பிடும்போது பிறர் பசித்திருக்கப் பார்த்து உண்பவரும் பல இடுக்கண்களுக்கே ஆளாவார்களென்பது பெரியோர் கூறியது உண்மை. எவ்வளவாயினும் தமக்கு இயைந்த அளவில் சிறிய தருமங்களை செய்தவர்கள் மேன்மை அடைவார்கள்.

அங்ஙனமின்றி மிகுதியாகிய பொருள் கிடைத்தால் அதன்பின்பு தருமம் செய்தலை ஆலோசிப்போம் என்று வாழ்நாளைக் கழிப்பவர்கள் உலக சிந்தனையாகிய கடலில் அகப்பட்டுச் சிதைந்தவராவர். தமக்குக் கிடைத்த வரையில் இளமையிலே ஈகை இல்லாதவர் பின்பு நாய் காணிற் கற்காணுவாறாய் ஆவர். ஆகையால், 'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை'; 'அறனும் அருளுடையான் கண்ணதே யாகும்' என்றபடி ஈகையும் அருளுடையான் மாட்டே ஆகும். ஊற்று நீர் இறைக்க இறைக்கச் சுரத்தல் போலப் பொருள் தானம்செய்யச் செய்ய சுரக்கும். 'கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கா லீண்டும்'—என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். பிறர்க்குக் கொடுத்தால் கைப்பொருள் செலவழிந்துபோக பின்பு வறுமைப்பட வேண்டி வருமே என்று கருதி கொடுக்கப் பின் வாங்குகிறவர்கள் அறிவிலிகளாவர். பொருள் அழிதற்குக் காரணம் வினைப்பயனே யன்றி ஈகை அன்று.

மறுமைக்கு வேண்டிய நல்வினையின் பொருட்டுக் கொடாவிட்டாலும இம்மைக்கு வேண்டிய புகழின் பொருட்டாகவாயினும் கொடுக்க வேண்டியது. ஏனெனில், நாம் கொடாவிட்டால் சமைக்காத அடுப்புடையராய்ச் சோற்றுப் பிச்சைக்கு வரும் வறியவர் தங்களைக் கொடுக்காத லோபிகளென்று இகழ்வர். ஆனதால் பிறர் பழிப்புக் கஞ்சியாவது ஈகை செய்தல் வேண்டும். தம்மால் இயைந்த அளவு பிறர்க்குக் கொடுக்கக் கூடாமற் போனாலும், தான் பிறரை இரவாமல் இருப்பது கொடுத்தலிலும் இருமடங்கு நல்லதாகும்.

பரிசுத்தமான ஊர் நடுவில் பழம் தரும்பனைமரம் ஒன்று இருந்து, அதைச் சுற்றிலும் திண்ணையும் இருந்தால் வேண்டியவர் வந்து பழம் பறித்துக் கொண்டு அத்திண்ணையின்மேல் உட்கார்ந்து கொண்டு புசித்தல்போல உயர்குலத்துப் பிறந்த உபகாரிகளை யாவரும் வந்து அடைந்து, அவரிடத்துத் தமக்குவேண்டிய பயன்களைப் பெறுவர். அசுத்தமான இடத்தில் தோன்றிப் பலனையுந் தராத மரத்தை எவரும் சேராதவாறு போல இழிகுலத்துப் பிறந்த லோபிகளாயினாரை ஒருவரும் அடையமாட்டார்கள். 'உதவுமாடுயர் பார்செழுபயன் மரம் பழுத்தற்றாகவும்'—என்று கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் தாமியற்றிய இராமாயணத்தில் கூறியிருக்கின்றார். எல்லா உயிர்களும் உய்வதற்கு மழை பொழிவது இன்றியமையாதவாறு போல வறிஞர்களெல்லாம் உயிர் வாழ்வதற்கு உள்ளவர்கள் கோபமின்றி ஈதல் இன்றியமையாததாகும்.

'ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றாமாக்க ளரும்பசி களைவோர் மேற்றே
உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை.'

என்று மணிமேகலையில் கூறியுள்ளபடி இல்லையென்று மறுக்காமலும், உறவு, நண்பு, அயல் என்னும் வேறுபாடு நோக்காமலும் வறியோர்க்கு அவர் இரந்த பொருளைத் தமக்கு இயைந்த அளவு கொடுத்தல் வேண்டும். அதுவே சிறந்த தானமாகும்.

'நல்லாறெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று.'

என்று மாதானுபங்கியார் முப்பாலில் கூறியுள்ளபடி ஏற்றல் வீட்டுலகிற்கு நல்ல நெறி யென்பார் உளராயினும், அது தீதாகும். ஈந்தார்க்கு அவ்வுலகெய்துதலில்லை யென்பார் உளராயினும் ஈதலே நன்று.

'அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.'

என்று பெருநாவலர் மொழிந்துள்ளபடி சிலர் அறத்தின் பொருட்டுப் பொ

ருளைக் கொடுத்தலில்லா ராயினும், இன்சொல்லை யாயினுஞ் சொல்லலா யிருக்க, அதுவும் செய்யாமைக்குக் காரணம் அவருடைய பாவமேயாகும். ஆதலால் ஈகை யில்லாதவருடைய செல்வத்தினும், ஈகைக் குணமுடைய வறியனுடைய தரித்திரங்களே மிகுதியும் நல்லனவாம்.

'பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.'

என்று பொய்யா மொழியில் நவின்றுள்ளபடி பகுத்துண்டல் பயின்றவனை பசியென்று சொல்லப்படும் தீயநோய் தீண்டுத லில்லை. மனிதர்கள் இம்மகர வாரிசூழ் புவனத்தின்கண் தண்ணீர்ப் பந்தல் வைத்தல் சோறுபோடுதல் முதலிய தர்மங்களைச் செய்வதனால் அவர்களுக்குப் புகழும் கீர்த்தியும் உண்டாகின்றன.

'கொடுப்பது விலக்கு கொடியோய் உனது
[சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றி யழிகின்
[றுய்.'

என்று கம்பரும்;

'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றமுடுப்ப
முண்பதூஉ மின்றிக் கெடும்.'— [தூஉ

என்று நாயனாரும் மொழிந்துள்ளபடி ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம் உடுக்கப் படுவதும், உண்ணப்படுவது மின்றிக் கெடும்.

'இரவலர் கன்றாக வீவாராவாக
விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவருன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.'—

என்று நாலடியாரில் கூறியுள்ளபடி கன்றைக் கண்ட மாத்திரத்தில் மகிழ்ச்சியொடு பாலைச் சுரக்கும் நல்ல ஜாதிப் பசுப்போல இரபபவனைக் கண்ட மாத்திரத்தில் சிறிதும் வெறுப்பில்லாமல் மிக்க மகிழ்ச்சியொடு அவர்க்கு வேண்டிய பொருளைக் கொடுப்பதுதான் ஈகையாகும். கன்று வாயைவைத்து ஊட்டி வருத்தவும் பிறர்பலர் பலவாறு பிடித்து அழுத்தவும் மனமின்றிப் பால் சுரக்கின்ற அற்ப ஜாதிப் பசுவைப்போல இரப்பவர் வாயினாற் பலபேசி வருத்தவும் மற்றும் பலர் பலவாறு நிர்ப்பந்தப் படுத்தவும் வெறுப்போடு கொடுப்பது ஈகையாகாது.

இன்னும் சிறிது கொடுத்தலில் பயனென்னென்று ஆலோசித்துக் கொடுத்தலைத் தவிரலாகாது. இயன்ற அளவும் இல்லை யென்னுமல் யார்க்கும் எப்பொழுதுங் கொடுத்தல் வேண்டும். அங்ஙனம் கொடுக்கப்பட்ட சிறு கொடைகளின் தொகுதியால் புண்ணியப் பயன் பூர்த்தி பெறும்.

'அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.'

என்று நாலடியாரில் கூறியுள்ளபடி, பெரியோரால் இவர் யாசகர்க்குக் கொடுத்தா ரெனப்பட்ட சொல்லை ஒன்றன் மேல் ஒன்று அடுக்கடுக்காக அமைந்துள்ள மூன்று உலகத்தவரும் கேட்பர். ஆதலினால் ஈகையினுடைய புகழ் எங்கும் பரவுகின்றது

'சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்
[கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்;
இட்டார் பெரியோர் இடாதா ரிழிகுலத்
பட்டாங்கி லுள்ளபடி.' [தோர்

என்று ஔவை பிராட்டியார் கூறியுள்ளபடி இந்நிலவுலகின்கண் இரண்டு சாதி இருக்கின்றது; அதில் யாசித்தவர்களுக்கு இட்டவர் மேலான சாதியாவர். அங்ஙனம் யாசித்தவர்களுக்கு இடாதவர்கள் இழிகுலத்தோராவர்.

"ஐயமிட்டுண்."

"ஐயமிடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவே யாயினும்நீ ரிடடுண்மின்."

என்றும் ஸ்ரீ சாரதாவதார மென்னும் நமது ஔவை பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளியபடி நாம் சாப்பிடுவதற்கு முன்னால் இவ்வளவாகிலும் இட்டுச் சாப்பிடவேண்டும்.

(தொடரும்)

C. P. வஜ்ஜிரவேலு.

மஞ்ஞைப் பதிகம்

ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. அவர்கள் யாத்தது.

உ
கணபதி துணை.
திருத்தணிகேசன் துணை.

(1)
ஆடு மயிலே ! நிர்த்தம்
 ஆடு மயிலே !—தணிகை
ஆறுமுக நாதன்வர
 ஆடு மயிலே !
பாமேடி யார்பரவ
 ஆடு மயிலே ! —சம்
பந்தன்வர எந்தன் முனம்
 ஆடு மயிலே !

(2)
தணிகைமலைத் தேவன்வர
 ஆடு மயிலே !—தத்திம்
தத்திம் தித்திம் தத்திமென
 ஆடு மயிலே !
பணியுமெனைக் காத்துவர
 ஆடு மயிலே ! —பரன்
பாலகுகன் ஏறிவர
 ஆடு மயிலே !

(3)
நீலமயிலே மந்த்ர
 ரூப மயிலே !—நிதம்
நித்தன் அத்தன் ஏறிவரு
 சித்ர மயிலே !
கோலமயிலே ! நீயே
 ஓல மயிலே ! —கூண்ட
கூடமுழு தோடினவி
 சேட மயிலே !

(4)
துங்க மயிலே ! நாக
 பந்த மயிலே ! —சிகைச்
சூட்டு மயிலே ! கவலை
 யோட்டு மயிலே !
வெங்கண் மயிலே ! கந்தர்
 தங்கு மயிலே !—அன்பன்
வெற்றி பெற வந்துதவு
 கொற்ற மயிலே !

(5)
நேச மயிலே ! அரன்
 பூசை உமையே— திகழ்
நின்னுருவங் கொண்டு செய்தாள்
 முன்னம் மயிலே !
ஆசை மயிலே ! எங்கள்
 அருணகிரியாம்—அன்பர்
அன்றழைக்க வந்து நின்றாய்
 ஆதி மயிலே !

---

1. *சம்பந்தன்-ஞானசம்பந்த ஸ்வாமியாகிய முருகபிரான்.*

3. *கோலம்-அழகு ; ஓலம் சரணம் ; சிவ பிரானிடமிருந்து பழம் பெறும் பொருட்டு முருகபிரான் மயில்மீதேறி அண்டமெலாம் ஒரு நொடியில் வலம் வந்த கதை இசசெய் யுளிற் குறிப்பிக்கப் பட்டுள்ளது. அல்லாம லும், சூரசம்ஹாரம் ஆனவுடன் சூரனுகிய மயில்மீதேறி முருகர் அண்டமெல்லாம் வலம் வந்தனர். மந்த்ர ரூப மயில்-மயில் ஓங்கார வடிவினது. "ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட தாடுமயிலென்ப தறியேனே." (திருப்புகழ்).*

4. *துங்கம்-பரிசுத்தம் ; நாகபந்தமயில்-நாகத்தை (பாமபை)க் கட்டியடக்கியுள்ள மயில். ("நாகபந்தமயூரா நமோநம"—திருப் புகழ.) அன்பன் வெற்றிபெற உதவினது-சம் பந்தாண்டாைேடு அருணகிரிநாதர் வாது செய்தபோது அருணகிரிநாதருக்கு மயில் உதவினது.*

5. *பார்வதி தேவியார் மயில் ரூபமாகி சிவ பிரானை மயிலாப்பூரிலும் மாயூரத்திலும் பூசித்தனர்.*

(6)

வாகை மயிலே ! மணி
நாக மயிலே ! —மலை
மாதுதரு நாதனமர்
சோதி மயிலே !
தோகை மயிலே ! தரு
மோக மயிலே !—சுகச்
சுத்த நிலை இன்னதெனச்
சொல்லு மயிலே !

(7)

தேவாதி தேவ னென்
றாடு மயிலே !—திருச்
செங்கோட்டு வேலனென்
றாடு மயிலே !
சாவாப்ர சாதந்தந்
தாடு மயிலே ! தனத்
தந்தான தானவென்
றாடு மயிலே !

(8)

வேலா விசாக என்
றாடு மயிலே !—மலை
வேந்தா குமார என்
றாடு மயிலே !
பாலா விநோத என்
றாடு மயிலே !—மலர்ப்
பாதா குகேச என்
றாடு மயிலே !

(9)

தத்திமென நிர்த்தமிடு
பச்சை மயிலே !— குக
சண்முகனை என்முன் வரப்
பண்ணு மயிலே !
சத்தி மயில் வஜ்ரமயில்
சண்டை மயிலே !—தனித்
தங்க மயில் துங்க மயில்
எங்கள் மயிலே !

(10)

செம்பொன் மயிலே ! சித்ர
பைம்பொன் மயிலே !-திருச்
செந்தின் மயிலே ! பரங்
குன்றின் மயிலே !
அம்பொன் மயிலே ! எங்கள்
நம்பன் மயிலே !—பணி
அஞ்சு மயிலே ! நீயே
தஞ்ச மயிலே !

(11)

வள்ளி மண வாளா என்றே
ஆடு மயிலே !—வான
மங்கை பங்க துங்க என்றே
ஆடு மயிலே
கொள்ளுநல மின்னதெனக்
காட்டு மயிலே—கோழிக்
கொடிக் கரத்துத் தேவனருள்
கூட்டு மயிலே !

(12)

ஆறு திருப் பதியானென்
றாடு மயிலே !— மெய்
யன்பருக்குக் கதியா னென்
றாடு மயிலே !
வேறுகதி யில்லை யென்றே
ஆடு மயிலே !—எங்கள்
வேல வேல வேல என்றே
ஆடு மயிலே !

(13)

அந்த மயிலே ! ஆ
நந்த மயிலே !—சச்சி
தானந்தன் பாட நடம்
ஆடு மயிலே !
சந்த மயிலே எங்கள்
கந்தர் மயிலே—பிர
சண்ட மயிலே ! சிகைக்
கொண்டை மயிலே !

---

7. சாவாப்ரசாதம்-இறவாத வரம்.
10. பணி-பாம்பு.

11. வானமங்கை-தேவசேனை.

12. ஆறு திருப்பதியான் - ஆறு ஸ்தலங்களைத் தமக்குப் பிரியமுள்ள ஸ்தானங்களாகக் கொண்டவன். ஆறு ஸ்தலங்கள்-திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, சுவாமிமலை, குன்றுதோறாடல் (திருத்தணி முதலிய மலைக் கோயில்கள்), பழமுதிர் சோலை.

13. சச்சிதானந்தன்-திருப்புகழ் பாடுதலிலும் அதன் பொருளை விளக்குவிப்பதிலும், மிக வல்லவரான வள்ளிமலை சுவாமிகள்.

(14)

வாசுகி எடுத்துதறு
வண்ண மயிலே!—நீ
வள்ளிமலை நாதன்வரப்
பண்ணு மயிலே!
ஆசுதேவர் பாடியுனை
ஓத மயிலே—வரம்
ஆதரித்துத் தந்தருளு
நீதி மயிலே!

(15)

கோடி நமஸ்கார முனைக்
காடு மயிலே!—கோடிக்
கோடி நமஸ்கார முனைக்
காடு மயிலே!
பாடி யுனைப் போற்றுகின்றேன்
ஆடு மயிலே!—ஆடிப்
பாடிப் பாடிப் போற்றுகின்றேன்
ஆடு மயிலே!

(16)

எப்போதும் போற்றி செய்வேன்
எங்கள் மயிலே! என்னை
ஏமனிடங் காட்டாதே
எங்கள் மயிலே!
முப்போதும் பூஜை செய்வேன்
எங்கள் மயிலே—திரு
முருகனருள் கூட்டிவைப்பாய்
எங்கள் மயிலே.

---

14. வாசுகி என்னும் பெரும் பாம்பையும் ஆட்டுவிக்கும் மயிலே! வாளெயிறதுற்ற படு வாய்தொறு நெருப்புமிழும் வாசுகி யெடுத் துதறும் வாசி. (திருவகுப்பு)

திருக்குறள் நாடகம்

மயிலை சீனி. கோவிந்தராஜன் அவர்கள் எழுதியது

களவியல் (110-ம் பக்கத் தொடர்ச்சி)

நின்றும், தன்குறை இன்னதென்று எடுத்ததும் தோழிக்கு வெளியிட இல்லை. தான், அவளை இரந்து பின்னிற்கவும் கரந்த மொழியால் தன் கருத்தறிவிக்கவுமே எண்ணினான் 'என் கையம்பால் மெய் வெம்பியது, ஒரு கலைமான் இங்கு வந்தது, அதைக் கண்டீர்களோ?' என்றான். 'பன்றி ஒன்று சென்றதா, பார்த்தீர்களோ?' என்றான். 'இத்தழையும் பூவும் நல்லது' என்றான். 'உங்களுக்கு இடை இல்லையோ?' என்றான. அவன் கேட்ட இத்தனை கேள்விக்கும் தோழியாவது தலைமகளாவது வாய்திறவாமல் வாளா இருந்தனர். இருக்கவே, பின்னும் அவன் 'நீங்கள் வாய்திறந்தால், உங்கள் வாய்முத்தம் சலக்கென உதிருமோ?' என்றான்.

இவ்வாறு வம்புவார்த்தையாடக் கேட்ட தோழி, அவனை ஐயப்பட்டுத் தன்னுள்ளே ஆராய்கின்றாள். "என்னே! தழையும், பூவும் கையில் ஏந்தினான்! வேட்டையைக் கொண்டாடுகின்றான்! அவ்வேட்டைக்குரிய வில்லையும் அம்பையும் காணோம். இவன் பேசும் பேச்சோ, இரண்டிற்கும் பொருத்தமில்லாதிருக்கின்றது — இவ்விடம் விட்டும் அகலான்! நம்மிடம் பேசாமலும் போகான்! பாவம்! ஏதோ குறை உடையவன் போலக் காணப்படுகின்றான். அதுவும் நம்மிடத்தேதானோ? (தலைமகளைப் புறங் கண்ணால் நோக்கி) என்னே! இவள் களிப்பு! இவன் வரவு கண்டு முகம் மலர்ந்தாள்; வாய்மொழி கேட்டு அகம் மகிழ்ந்தாள். என்றும் இல்லாத எழிலும் இதோ! இவள் முகத்தில் விளங்குகின்றதே!—(தலைமகனையும் தலைமகளையும் நோக்கி) ஆ! இதென்ன? இவ்விருவரும் புதுவோர் போல—முன்னறியாதார்போல—ஒருவரை ஒருவர் பொது நோக்கால் நோக்குகின்றார்கள்! நோக்கி, உள்ளத்திலே மகிழ்கின்றார்கள்.—மதுவை மறைந்து உண்டவர் மகிழ்ச்சிபோல வெளிப்படாமல் மகிழ்கின்றார்கள்! இப்படி ஒருவரை ஒருவர் நோக்குவதும்

உள்ளத்திலே மகிழ்வதும் இவர்—இருவரிடத்தும் இருக்கின்றதே! இச்செய்கை காதலரிடத்தே காணப்படுவது அல்லவோ? இவரும் காதலை உடையவர்தாமோ? ஆம்! காதல் உடையவரே ஆகும்! 1099.

—"ஆ! இதோ! பார்! ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் நோக்கால் ஒக்கின்றன! இனி வாய்ச்சொற்களால் வரும் பயனும் உண்டோ? இவர் கண்கள் காதல் நோக்கினை உடையன! இவர் பேசுகின்ற பேச்செல்லாம் மனத்திலே தோன்றுவன அல்ல. வாயளவில் தோன்றுகின்ற வெறுஞ் சொற்கள். இச்சொற்களும் ஒரு பயனை உடையனவா? கொள்ளப்படுவனவோ? அல்ல! அல்ல!!—மெய்யாக இவள் புனம் காப்பவளும் அல்லள்! இவன் வேட்டம் செல்பவனும் அல்லன்! இதுவரையும் இவன் பேசியதெல்லாம் வம்பு மொழியே! நம்புவன அல்ல!" 1100.

இவ்வாறு அக்காதலர் இருவரின் உள்ளக் கருத்தையும், அவர் கண்ணின் குறிப்பினால் கண்டு தெளிகின்றாள் தோழி.

ஏழாம் நாள்.

5. மடல்திறம்.

களம்:—குறிஞ்சியில் ஒரு தினைப்புனம்.
காலம்:—கூதிரில் ஒரு மாலை.
கூத்தர்:—தலைமகன், தோழி.

கரந்த மொழியால் தன் கருத்தறிவித்துப் பிரிந்த தலைமகன், தோழிக்குத் தன் குறையைக் கூறி இரக்கும் பொருட்டு, அவள் காக்கின்ற தினைப்புனத்திலே பலநாளும் போய்ப் புகுந்தான். புகுந்தானொடு, அவள் நாணம் உடையவளாதலால் சொல்லாடாமல் இருந்தாள். இருக்கவே, அவனுக்கு நாளுக்கு நாள் ஆற்றாமை பெருகிற்று. பெருகிப் பெருகி, 'இவன் ஆற்றாமை இதன்மேலும் பெருகும் வகை இல்லை' என்று சொல்லும்படி பெருக்கத்திற்கு ஓர் எல்லையில் வந்து நின்றது. அவன் ஆற்றாமைப் பெருக்கத்தாலும், அவ்விடம் பலகாலும் வந்து திரியும் பழக்கத்தாலும் தோழிக்கும் நாளுக்குநாள் நாணம் சுருங்கிற்று. சுருங்கிச் சுருங்கி, 'இவள் நாணம் இதன்மேலும் சுருங்கும் வகை இல்லை' என்று சொல்லும்படி சுருக்கத்திற்கு ஓர் எல்லையில் வந்து நின்றது. அந்த நிலையிலே, தலைமகன் அவளிடம் சென்று நின்று தன் ஆற்றாமையினாலே அழுகின்றான்.

த-ன்:—"நங்காய்! இன்று நாளை என்று எத்தனைநாள் கழிந்தது? என் குறை இன்னும முடிந்ததா? இக்காரியம் உன்னால் முடியுமென்று இதுவரையும் இங்கே வந்து முயன்றேன். இன்றே முடியாமை அறிந்தேன். இனி இழிந்தசெய்கை செய்தாவது ஆம்! மடல் ஊர்ந்தாவது முடிப்பேன்.—துன்புற்ற ஆடவருக்குத் துணையாவது மடலே அல்லவா? அரியவராகிய மகளிரோடு ஆடவர் இன்பம் உண்ணுவர். பின்னை அவ்வின்பம் பெறாமல் வருந்துவர். அப்படி வருந்துவோருக்கு அருந்துணையாவது மடலே ஆகும். ஆமாம்! அவருக்குப் பனை மடலே பழமையான துணை! நெடுங்காலமாக இதுவே துணையாகி வருகின்றது!—எனக்கும் இன்று இம்மடன்மாவே துணையாகின்றது. அதைக் கொண்டே, நங்காய்! இழந்த இன்பத்தை நான் அடைவேன்." 1131.

தோழி:—"அதைக் கொண்டா, அடையப் போகின்றீர்? ஐய! மடல் ஊர்தல் மற்றெல்லோருக்கும் முடியுமே. உமக்கும் அது முடியுமா? நீங்கள் நாணம் உடையவர் அல்லவா?"

த-ன்:—"ஆம், உடையேன்தான்! முன்னெல்லாம் அந்த நாணமே நடுவே நின்று என்னை மடல் ஏறாமல் மறித்தது. இப்பொழுது உடம்பும் உயிரும் ஒருங்கிருந்துகொண்டு அந் நாணத்தையும் அகற்றி விட்டது! இந்த நாணம் அகலுமுன்னமே என் நாற்குணமும் அழிந்திருந்தேனே! அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி

என்னும் ஆடவர் நாற்குணமும் என்னைவிட்டு அப்பொழுதே அகன்றதே! இப்பொழுது எனக்கு உள்ளதெல்லாம் உடம்பும் உயிருமே! இவையும் ஒன்றை ஒன்று நீங்காதபடி தமக்குத் துணையாகிய மடன்மா ஏற என்னுகின்றன." 1132.

தோழி:—"அவை எண்ணினும் உமக்கு அது ஆகாது!—ஐய! இழிவான செயலைச் செய்யாமல் விலக்குவதாகிய நாணமும் உடையீர். ஒன்றற்கும் தளராமல் நிற்றலாகிய ஆண்மையும் உடையீர். இவ்விரண்டும் உடைய உமக்குமடல் ஏற எப்படி முடியும்?"

த-ன்:—"நல்லாய்! இன்னும் அவற்றை உடையேனோ? உடையேனாயின் முடியாதுதான் நீ சொல்லுகின்ற நாணமும் நல்லாண்மையும் முன்னெல்லாம் உடையேன். அவை காமத்தால் நீங்கி விட்டன. இன்று காமம் மிக்கார் ஏறுகின்ற மடலையே உடையேன்! ஆம்! அது ஒன்றையே உடையேன்! நான் கருதியது இன்று கடிதிலே முடியாதா? 1133.

தோழி:—"என்ன! ஐய! நாணமும் நல்லாண்மையும் காம வெள்ளத்தால் நீங்குவனவா? அல்லவே? அவை அல்லவோ இதற்குப் புணை?"

த-ன்:—"அல்ல, நான் என் காமமாகிய கடிய புனலைக் கடப்பதற்கு அவற்றையே கொண்டேன்—அந்த நாணத்தையும் ஆண்மையையும் புணையாகக் கொண்டேன். நான் கொண்டபுணை நின்றதா? அந்தப் புணையை இந்தப் புனலே என்னிடத்திலிருந்து பிரித்துக்கொண்டு போய்விட்டது. ஆதலால், இப்புனலுக்கு அவை புணை ஆகுமா? ஆகாது." 1134.

தோழி:—"அது கிடக்கட்டும். இவ் ஆற்றாமையும் மடலும் உமக்கு எப்படி வந்தன? ஐய!"

த-ன்:—"வந்த வகையை நீ அறியாயா? நங்காய்! உன் தோழியே தந்தாள். தொடலைக் குறுந்தொடி உன் தோழியே தந்தாள். மாலைப் பொழுதிலே அனுபவிக்கும் துயரினை முன்னே அறிவேனோ? அல்லது, அத்துயருக்கு மருந்தாகிய மடலினை முன்னே அறிவேனோ? இப்பொழுதே எனக்கு உன் தோழியே தந்தாள்.—நீ கூறியதே கூறும் இளமையளாகிய அவள் கொடுத்த துயரினை நீ நீக்கலாகாதா?" 1135.

தோழி:—(புன்னகையோடு) "ஐயோ! என்ன செய்வீர்? மடல் ஊரும் பொழுது இன்றைக்குக் கழிந்ததே! நாளை—."

த-ன்:—"நாளையா? நல்லாய்! உன் பேதைக்கு—உன் தோழி காரணமாக—என் கண்கள் ஒருகாலும் உறங்குதலைப் பொருந்தா. இரவும் பகலும் எல்லா நேரமும் விழித்தே இருக்கின்றன. அதனால் எல்லாரும் உறங்கும் இடையாமத்திலும் நான் இருந்து மடல் ஊர உள்ளுவேன். எனக்கும் மடல் ஊரும் காலம் என்பது ஒன்று உண்டா? இல்லை.—நங்காய்! குறை முடிப்பது நாளை என்ன வேண்டா." 1136.

தோழி:—"ஐய! மகளிரே பேதையர்; அவரே கண் உறங்காமல் கவலுவர். நீங்கள் அறிவுடைய ஆடவர் அல்லவோ? ஆற்றியிருக்க வேண்டாமோ?

த-ன்:—"ஆற்றியிருக்க ஆடவருக்கும் ஆகுமா? பெண்களே கடல்போன்ற கரையற்ற காமநோயினை அனுபவிப்பார். அனுபவித்தும், மடல் ஊர்தலைச் செய்யாமல் ஆற்றியும் இருப்பார்! அவர் பிறப்புப்போலப் பெருந்தக்க பிறப்பும் உண்டா?—அவர் பிறப்புப்போல மிக்க தகுதியினை உடைய வேறு பிறப்பும் உலகத்தில் உண்டா? இல்லை. நான் ஆணாகப் பிறந்தும், பெண்ணிடத்தே உள்ள அடக்கமும் என்னிடத்தே இல்லை ஆயினேன். நங்காய்! நீ அதை அறிய இல்லையே!"

இவ்வளவில் பொழுது மறைந்தது. தோழியை அழைத்துப் போக அத்

தினைப்புனம் நோக்கி ஆயமும் வந்தது. அது கண்டு, தலைமகன் அவ்விடம் விட்டுப் பெயர்கின்றான்.

—நாள்.

6. சேட்படை.

களம்:—குறிஞ்சியில் ஒரு தினைப்புனம்.
காலம்:—கூதிரில் ஒரு மாலை.
கூத்தன்,—தலைமகன், தோழி, தலைமகள்.

பலநாளும் தன்னிடம் வந்து இரத்தலும் குறையுறுத்தலும் செய்து ஆற்றாதாகிச் செல்கின்ற தலைமகனைக் கண்டு தோழி மனம் இரங்கினாள். இரங்கிய பின், தலைமகளிடத்தும் அவன் குறையை எடுத்துச் சொல்லி, அக்குறையை அவள் நயக்கும்படியும் செய்தாள். செய்து, தன்னுலாகிய கூட்டத்தைக் கூட்டவும் விரும்பினாள். விரும்பினவள் தனது முயற்சியின் அருமையும், தலைமகளது பெருமையும் தலைமகன் அறிய வேண்டுமென்றும், அவ்வாறு அறிந்து தலைமகளை அவன் விரைந்து வரைந்து (மணந்து) கொள்ள வேண்டுமென்றும் எண்ணி, 'இதற்கு யாது செய்வோம்?' என்று ஆராய்ந்திருந்தாள்.

அதுபொழுது கண்ணியும் தழையும் கையில் ஏந்திக்கொண்டு வழக்கம்போலத் தலைமகன் அவ்விடம் வந்தான். வந்தவனைத் தோழி கடுகடுத்து நோக்கிக் கண்ணோட்டமின்றிக் கடிகின்றாள்.

தோழி:—"இவ்விடம் பெண்கள் இருக்குமிடம், காவல் மிகுதி உடையது. நீங்கள் இங்கே வரலாகாது. எமது அண்ணன்மார் திண்ணியர்; கொடியவர். உங்களைக் கண்டால் ஏதம் செய்வார். எங்கள் அன்னையும் முனிவாள். இங்கே நில்லாதீர். போய்விடுங்கள்."

த-ன்:—(அவள் சொல்வதைக் கேளாதவன்போல நின்று, தன்னுள்ளே) "காவலாம்! கொடியராம்! முனிவாளாம்! இதென்ன?—ஆ! இவள் என்னிடம் மிகவும் பரிவுடையவள். இல்லையானால் இவ்விடத்தின் தன்மையை எனக்கு உள்ளபடி உரைப்பாளா? ஆம்! பரிவுடையவளே! இவ்வளவு பரிவுடையவள் என் குறை முடித்துத் தரமாட்டாளா? தருவாள்! தடை இல்லை!—இவள் கடுகடுத்த மொழியின் கருத்தை நான் அறிவேன்! என் குறை முடிக்கவே என்னைச் சேட்படுத்துகின்றாள்—இரக்கமின்றி அகற்றுகின்றாள் அகத்தே அருளுடையவள்! புறத்தே மட்டும் அயலார்போலக் கடுஞ்சொல் சொல்கின்றாள்!—இச் சொற்கள் நன்மையைத் தருமென்று நான் அறியேனோ?

—"பின்னே இனிதாகி முன்னே இன்னாதாகும் சொல்லைச் சொல்லுவர். நெஞ்சிலே சினவாதிருப்பார். இருந்தும், வெளியே சினந்தார் போலச் சீறி நோக்குவார். இவை யாருடைய செய்கை? யான் அறியேனோ? அன்பாயிருந்தும் அயலாரபோல நடிப்பவர் செய்கை அல்லவா? இச் செய்கை—இக்குறிப்பு—உள்ளே ஒரு பயனைக் குறித்துச் செய்கின்றதே! இவருக்கு இயல்பலலவே! இதற்கு நாம் அஞ்ச வேண்டுமோ?" 1097.

இவ்வாறு தன்னுள்ளே நினைந்துகொண்டு, பேச்சின்றிப் பித்தன்போல நின்ற தலைமகனை நோக்கித் தலைமகள் மகிழ்கின்றாள். அவள் மகிழ்ச்சியைக் கண்ட தலைமகன் தன்னுள்ளே சொல்லுகின்றான்.

த-ன்:—"ஆ! என், அசைந்த இயலாள்! இவள் நகையிலே ஒன்று நான் அறிகின்றேன்! அது வாய்விட்டுச் சொல்லுவதா?—'தன்னை அகற்றுகின்ற சொல்லுக்கு ஆற்றாகின்றான்! ஐயோ! பாவம்! எப்படி இரந்து நோக்குகின்றான்!' என்று பலவாறு என் பணிந்த பார்வையைப் பார்த்துப் பசக்கின்றாள்! உளம் நெகிழ்கின்றாள்! பின்பு, உள்ளே மெல்ல நகுகின்றாள். இந்த நகையினிடத்தே ஒன்று தோன்றுகின்றதே! அந்த நன்மைக் குறிப்பு இனிப் பழுதாகுமா? ஆகாது!

(தொடரும்)

ஸத்ய ஸந்யாசம்

எம். எஸ். ஸ்ரீநிவாச சர்மா எம். ஏ., (Hons) அவர்கள் எழுதியது.

(70-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாயக் கிழவேடன் மறுபடியும் பழைய கிருஷ்ணனாக மாறி ஸத்யபாமையின் தோளில் கையை வைத்துக்கொண்டு அவள் முகத்தை ஆநந்தத்துடன் நோக்கினான். அந்த நோக்கத்தின் கருத்தை ஊஹித்துணர்ந்த ஸத்யபாமா, கிருஷ்ணனுடைய அழகிய கைகளைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு, "ஹே ப்ராண வல்லபா! என்னுடைய புத்திஹீனந்தான் என்னே! நான் சுத்த நிர்மூடம்! வெளி டாம்பீகத்தையும் வெளிப்பகட்டையுங் கண்டு மதிமோசம் போனேன். மனைவி மக்களைத் துறந்து வனத்தில் வஸித்தால் மாத்ரமே ஒருவன் உண்மை தபஸ்வி ஆகமாட்டான்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, ஸ்ரீகிருஷ்ணன் திடீரென்று, "என் அன்பே! ஸத்யபாமா! என்னைப் பிடித்துக்கொள். உறுதியாக, கெட்டியாக, இறுகப் பிடித்துக்கொள். என்னை என்னமோ இழுக்கிறதே. என்னை விடாதே! ஜாக்ரதையாகப் பற்றிக்கொள். ஏதோ அபாரமான சக்தி என்னை இழுத்துச் செல்கிறதே! என்ன செய்வேன்? விடாதே! விடாதே!" என்று மென்மேலும் ஸத்யபாமையை இறுக்கிக் கட்டிக்கொண்டு கூவினார். திடீரென்று இவர் இப்படி சொல்லவே ஸத்யபாமா ஆச்சர்யத்துடன் திக்பிரமை கொண்டாள்; கிருஷ்ணனுக்குப் பைத்யம் பிடித்துவிட்டதோ என்று ஸம்சயம் கொண்டாள்; ஆனாலும், தன்னுடைய ப்ராணபதியின் வார்த்தையை நிறைவேற்றவேண்டி அவரைத் தன் கைகளால் இறுக்கிப் பற்றிக்கொண்டாள். அங்ஙனம் செய்ததுதான் தாமஸம். உடனே மின்சார சக்தியின் ஆவேசம்போல் இவர்களிருவரும் ஒருங்கே இழுக்கப்பட்டார்கள். ஸத்யபாமைக்கு ஒன்றும் புரியவில்லை. எந்த சக்தி தங்களை இழுக்கிறது? எங்கு இழுத்துச் செல்கிறது? என்பது ஒன்றும் ஸத்யபாமைக்குப் புலப்படவில்லை; கிருஷ்ணனை விநயத்துடன் கெஞ்சினாள். அதற்கு அவர், "அது என்னமோ எனக்கே தெரியவில்லையே! சக்தியின் முன் எதிர்த்து நிற்க எனக்குக் கொஞ்சமும் பலமில்லை. ஒருவேளை யாரோ ஒரு பக்தன் தன் அன்பு என்னும் பாசத்தால் என்னைத் தன்னிடம் இழுக்கிறான்போலிருக்கிறது என் உயிர்க்குயிரான ஸத்யபாமா! பார்த்தாயா என் கஷ்டத்தை? கடவுளாக இருப்பதால் எவ்வளவு துன்பத்தை அனுபவிக்கவேண்டியிருக்கின்றது பார்!" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது இவர்களிருவரும் ஒரு அத்யத்புதமான அரண்மனையண்டை வந்து சேர்ந்தார்கள். அரண்மனையின் முன்புறத்தின் நந்தவனத்தில் மிக்க ப்ரகாசத்தைத் தரும் அதிசிலாச்யமான விளக்குகள் ஜ்வலித்துக் கொண்டிருக்க, விசித்ரமாகச் சிங்காரிக்கப்பட்ட கட்டிலில் தேகத்தில் எவ்வித உடையுமின்றி ஒரு யௌவன ஸௌந்தர்ய புருஷன் பட்டுத் தலையணைகளின்மீது சாய்ந்திருந்தான். அவனைச் சுற்றிலும் ஆறு அழகிய இருபது வயதுக்கு மேற்படாத ரூபவதிகளான யுவதிகள் நிர்வாணமாய் மனோரம்யத்துடன் சிருங்கார ரஸம் ததும்பிய பாடல்களைப் பாடிக்கொண்டே "ரஸ மண்டலம்" என்று கூறப்படும் ஒரு திவ்யமான நடனத்தை நிர்த்தனம் புரிந்து, அவனுக்கு மஹா ஆனந்தத்தை விளைவித்துக்கொண்டிருந்தனர். இந்த விநோதக் காக்ஷியைக் கண்டதும் ஸத்யபாமா மிக்க பரிஹாஸத்துடன் கிருஷ்ணனைக் கண்டு, "இந்த மஹா புருஷன்தானா உன்னுடைய பக்த சிரோமணி?" என்று ஹேளனமாகக் கேட்டாள். அதற்குக் கிருஷ்ணன் சாந்தத்தோடு, "கண்ணே! அவஸரப் படாதே! முற்றிலும் பொறுமையுடன் கவனித்

துக்கொண்டிரு" என்று சொல்லிக் கொண்டே சென்றார். அவர்கள் வரவைக் கண்டதும், அழகிய அங்கனைகள் அறுவரும் நிர்வாணமாய் இருந்ததனால் வெட்கத்துடன் பரபரப்போடு உள்ளே நுழைந்து ஒளிந்துகொண்டனர். யௌவன புருஷன் மாத்திரம் தான் படுத்திருந்த கட்டிலைவிட்டிறங்கித் தன் வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு, அவஸரத்துடன் ஓடிவந்து, கிருஷ்ண பரமாத்மாவின் பாத கமலங்களில் தன் சிரசை வைத்து அதிக மர்யாதையுடன் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "மஹா ப்ரபோ! ஸர்வலோக சரண்யா! ஆபத்பாந்தவா! அனுதாரக்ஷகா! ப்ரபஞ்சம் முழுவதையும் சிருஷ்டித்து ரக்ஷிக்கும் எம்பெருமானே! வரவேண்டும். புழுப் போல்பவனாகிய என்னிடம் இவ்வளவு கிருபையுடன் வந்ததற்கு நான் சிறிதும் பாத்ரனல்லனே. அளவற்ற உமது தயாள குணத்தின் முன் என்னுடைய தவமும் தர்மமும் சூன்யமல்லவா? எல்லையில்லாத உமது சக்தியையும் தயையும் எனது அல்பவார்த்தைகள் எங்ஙனம் புகழக்கூடும்? ப்ரபஞ்ச முழுவதும் உமதாயும் நீராயுமிருக்க நான் வேறென்றும் நீர் வேறென்றும் உண்டோ? ப்ரஹ்மமாகிய நீர் ரூபி அரூபி; நாமமுடையவர் நாமமற்றவர். மனிதனைப்போல் இப்போது தோன்றும்நீர் கூர்மையாகப் பார்க்கும்போது அநிர்வசனீய ஜ்யோதியாய் விளங்குகிறீர். நான் எப்படி உம்மை ஸ்துதிசெய்வேன்? நான் விரும்புவது எது? ஒன்றுமில்லையே! ஆனாலும் ஸச்சிதாநந்த ஸ்வரூபியாக உம்மை நீர் எப்படியிருக்கிறீரோ அப்படியே நான் அறியும்படி கிருபை புரியவேண்டும்" என்று ஆநந்தக்கண்ணீர்பெருக ஸ்தோத்திரம் புரியலானான். உடனே ஸ்ரீகிருஷ்ணனும் அந்த யுவபுருஷனும் ஆலிங்கனம் செய்ய ஆரம்பித்தார்கள். அந்த க்ஷணமே மஹாஜ்யோதி ஒன்று அங்கு தோன்றிற்று. ஸத்யபாமாவுக்கு அவ்விடத்தில் அந்த ஸமயம ஒன்றும் தோன்றவில்லை. தனது ஆசை நாயகன் கிருஷ்ணனாவது, அந்த யுவபுருஷனாவது அங்கு காணப்படவில்லை. ஒரே ஜ்யோதி ஒரே ஆனந்தம். ஒரு நிமிஷம் இதைச் சிந்தித்த ஸத்யபாமாவும் அடுத்த நிமிஷமே தன்னை மறந்தாள்.

* * * *

இரண்டொருமணி சாவகாசம் கழிந்தது. ஸ்வப்நத்திலிருந்து விழித்தவள் போல் எழுந்தாள் ஸத்யபாமா. எழுந்ததும் முன்போலவே தான் மணாளன் கிருஷ்ணன்மீது சாய்ந்தவண்ணம் இருக்கக் கண்டாள். "ஹே திருடா! மாய வேஷ சிரோமணி! உனக்கு நமஸ்காரம். ஸத்யமான ஸந்யாஸம் இன்னது என்பதை எனக்குப்போதிப்பதற்காக இந்த வேஷமெல்லாம் போட்டாயல்லவா? பெண்டு பிள்ளைகளைச் சரீர மாத்ரத்தாலே விட்டுத் தவிர்த்து காட்டுக்கு ஓடுவது உண்மையான ஸந்யாஸமன்று. மனஸால் த்யானிப்பதுதான் உண்மைத் துறவு. துறக்கவேண்டுவன சித்த சலனங்களாகிய கோபம், ஆசை, பொறாமை, முதலியவைகளாம். ப்ரஹ்மத்தை உள்ளபடியே உணர்ந்து, ப்ரபஞ்ச விஷயஸங்கங்களில் உள்ள பற்று முழுவதையும் அறவே தவிர்த்து, அபேத ஞானத்தையடைந்து, ஸச்சிதானந்தஸ்வரூபனை எவன் ஸதா அனுபவிக்கிறானோ அவனே ஸத்ய ஸந்யாஸி. ஸ்தூலத்தில் மாத்திரம் மனைவி மக்களைத் தள்ளிவிட்டுக் காட்டில் வஸித்துவந்த போலி ஸந்யாஸி மஹா பாபியாம். அவன் மனம் காமக்ரோதாதிகளையே நாடிச் செல்றது. ஆனால், ஸ்திரீகள் மத்தியில் ஸல்லாபித்துவந்த புருஷனே உண்மையால் உன்னை உணர்ந்து ஞானம்ருத வசனங்களைத் தான் அநுபவித்த வண்ணமே வெளிப் படுத்தினான். போலி ஸந்யாஸியோ உன்னைக் கண்டு பயந்து ஓடிவிட்டான். யௌவன புருஷனே தன்னுடைய பக்தி ப்ரேமைகளால் உன்னைத் தன்னிடம் மின்சார சக்தியைப் போல் இழுத்தான். இதுதான் ஸத்ய ஸந்யாஸத்தின் திவ்யலக்ஷணம்" என்று ஸந்தோஷமாய்ச் சொன்னாள் புன்னகை கூடிய அதிக ரூபலாவண்யத்துடன் விளங்கிய ஸத்யபாமா. (முற்றும்.)

தனித் தமிழ்ப் பகுதி

தனித்தமிழ்

"முத்தமிழு நான்மறையு மானான்கண்டாய்" என்று சிவப்பற்றுநெறி செழித்தோங்கச்செய்த அருளாளராய நால்வரிலொருவரும் தமிழ்மறை யெனப்படும் "தேவாரம்" பாடியவருமாகிய திருநாவுக்கரையர், அப்பர் எனப் புகழ்ப்பேர்களால் புனைந்து கூறப்படும் மருணீக்கியார் வண்டமிழால் நோத்தீர்வு பெற்றமாண்புடைய அருண்மொழிச் செல்வர் தாம்அருளிய அருட்பாக்களிலும், "மும்மைத் தமிழ் மதுரை முக்கண்ணப்பன்" என மதுரைக்கலம்பகத்திலும், "முத்து முத்தமிழுந் தந்து முற்றுமே" என்று கம்பர்பாடிய இராமகாவியத்திலும், "மோனை முத்தமிழ்மும்மதமும் பொழியானை" யென, வெட்டுண்ட சென்னிகள ஒட்டுற்றுயிரா பெறப் பாடிய ஒட்டக்கூத்தரும் பிறரும் குறிப்பிட்ட முத்தமிழ் என்பது இயல், இசை, கூத்து எனப்பிரிவுபடுத்தப்பட்ட நந்தம் தனித்தியங்கும் பெற்றியினையுடைய தண்டமிழேயாம். இப்பாகுபாடு அகத்தியனார் ஆக்கிய அகத்தியம் என்னும் எழுத்து (இலக்கண) நூல் வாயிலாய் அந்நூல் தோன்றிய நாள்முதல் இப்பிரிவுபேறு ஏற்படுத்தப்பட்டது என்ப. இயல், இசை, கூத்து என்பன ஒன்றுபியைந்து ஒழுக்க முறையானே உலவி வந்தனவாம். இசையுங் கூத்தும் அவற்றிற் குரிய நூற்களொழிவோடு அழிந்தன என்பாரும பண்டைய நூற்களிலிருந்து ஆங்காங்குக்கூறப்பட்டனவும் உரையாளரான் எடுத்து ஓதப்பெற்றனவுமாய சிற்சில குறிப்புகளை யொருவழிப் படுத்தி யவை யுளவென்பாரும் உளர். இசை யென்பது "தேவாரப்" பாக்களுக்குக் குறிப்பிட்டுள்ள பண்களும் அவற்றினியல்களும் என்றறியக் கிடக்கும். இது "இசை நுணுக்கம்" என்ற நூற்பெயரானும்; கூத்து, 'கூத்த நூல்' 'மதிவாணர் நாடகத் தமிழ்' என்றவைகளானும் பிற்பட்ட நூற்களாலும். மேற் குறிப்பிட்ட மூவகைத்தமிழ் என்னும் முறையகத்தியத்தே தோன்றியனவாகலின்,

"இலக்கணமென்ப திலக்கியமுறையுற
வைத்ததென்று வழங்கப்படுமே"

"இலக்கியமின்றி யிலக்கணமின்றே
எள்ளின்றாகில் எண்ணெயுமின்றே
எள்ளினின்றெண்ணெ யெடுப்பதுபோல
இலககியத்தினின் றெடுபடுமிலக்கணம்"

எனறபடி முன்னரே அவை யியைந்து நூற்களில் காணப்பட்டும், தமிழர் இருநடைகளிலும் இருக்கப் பெற்றும் இருந்த தமிழ்மொழிக்குப் பின்வந்த அகத்திய நூலில் எழுததுவகை இயற்றப் பட்டதுபோலும். அன்றேல் அகத்தியத்துக்கும் முதனூலாய் தண்டகநாட்டில் தமிழ் தழைத் திருந்தபோது ஆண்டு வழங்கிய முருகவேளால அருளபபட்ட 'குமரம்' என்னும் எழுத்து நூலி லிருந்திருக்கக் கூடும் அத்தகைய மிகபபழைய இசை, கூத்து இயல்களின் விரிவுகளைக் கிடைத்த மட்டும் குறிப்புகளைக் கொண்டும் வடமொழியில் அவற்றின் விரிவுநூல்களில் அவற்றைப்பற்றிக் கூறும் இயல்களையும் எடுத்து ஒன்றுபடுத்தி யிந்நாளில் அவையில்லாக் குறையை நீக்கக் கற்றோரும அவர் வயினொழுகும் செல்வர்களும் என் நூலாக

வெளிப்படுத்த முயலக்கூடாது? வட
மொழியிலிருந்து ஏன் எடுப்பது என்பர்
போலும். பண்டை நாட்களில் இசை
யில் சிறந்து விளங்கிய நம் தாய்நாடாம்
தென்னாட்டி னின்றே வடமொழிக்கு
இசை சென்றிருக்க வேண்டும் என்று
இசைத் தமிழ் (கருணாமிர்தசாகரம்)
நூலார் ஏற்ற அளவையோடு
எடுத் தியம்புகின்றனர். இசையியல்
போன்றே கூத்தியலும் ஏன் அம்மொழி
யில் குடியேறி யிருக்கக்கூடாது? தொல்
காப்பிய காலத்தே புலவர் குழுமிய கூட்
டத்தைக் குறிப்பிடும் அவை யென்னுஞ்
சொல் வடமொழியில் குடியேறித் தன்
வடிவு வேறாய் சபை, சபா என்றும்,
நீர் எனுஞ் சொல் செப்பனிடப்பட்ட
(வட) மொழிக்குப் போய் நீரம், நாரம்
என்றும், அம்மாவென்பது மா, மாதுர்
என்றும் அப்பா என்பது பா, பிதுர்
என்றும் பிறந்தோன் என்பது பிராதா,
பிராதுர் என்றும் இங்ஙனம் பல நூறு
சொற்கள் தமிழினின்று பல மொழி
களுக்கும் சென்றமை போல வட
மொழிக்கும் சென்றிருக்கின்றன. ஈற்
றில் வரும் றஃகான் நீங்கிய வல்லின
குற்றுகரங்களாகிய கு, சு, டு, து, பு,
வன்றொட ரொழிந்த ஏனைய நெடிற்
றொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொ
டர், மென்றொடர், இடைத்தொடர்
குற்றியலுகர நடையில் அவற்றின்,
வன்மை கெட்டு மெலிந்தும்
க, ச, ட, த, ப க்கள் அவற்றின் மெய்
களைத் தொடராது மொழிக்கு இடை
யிலும் ஈற்றினும் எவ்வுயிர ஏறியேனும்
வழங்கிடினும மெலிவுற்றும் ஒலிக்கும
இயல்புடையனவாம். ஒரு படை கொ
ண்டு பலரை வெலலும் உறுவிறல்போல்
சில இன்றியமையா வெழுத்துக்களைக்
கொண்டே பலதிறபபட்ட மொழிகளா
கப் பொருந்தி யமைந்த பொன்றாப்புக
ழுடைய முன்னைய தனித்தமிழ் மொழி
நிலவுந் திறமையை யொரு
சிறிதும் ஓராது, உய்த்துண
ராது, ஊன்றி நோக்காது பலபல உரை
யாடுவர். முயற்சியோடு பொருளறிந்
தும், வழக்கின் பழக்கமுணர்ந்தும்
தனித்தமிழ் மொழிச் சொற்களை யுரை
யாடுவோரது அழியா மரபா னுணரும்
மொழி வழக்கு சிறப்புடையதோ
அன்றி முயற்சியில்லாது மடியுடையார்
செயல் போன்று பலபல வெழுத்துக்
களும் கிளைஎழுத்துக்களும் சொற்களும்
ஒட்டுசொற்களும் ஒருகோடி யென்னும்
படியொருங்கே அமைந்து மொழியைப்
பெருஞ் சுமையாக்கி வருந்தி வாயால்
அடி வயிறுமுதல் நாவீறாக அல்லலுற
நினைத்தவற்றிற்கெல்லாம் ஒலிகள் வேறு
வேறு ஆகி நெடுங்கணக்கு விரிவுபெற்று
வழங்கும் மொழியின் வழக்கு சிறந்த
தோ? சீர் தூக்குவோர் தேர்ந்தறியக்
கிடக்கின்றன.

இஃதிவ்வாறாக, முகம், அகம், புகழ்,
வகை, கடுகு இவை போன்ற சொற்
களில் வந்துள்ள வல்லினத்தில் ஒன்றாய
கஃகான் மெலிந்து ஒலிப்பதால் இவ்
வொலியை யுடைய எழுத்துகள் தென்
மொழியிலில்லை; வடமொழியில்தா னுள்
ளனவென்று கொண்டு இவை வடமொ
ழிச் சொற்களே யென்று கூறும்
மேனோக்கு கொண்டவருமுள்ளார்.
ஆயின்மேற்கூறியவற்றில் ஒன்றை யெடு
ததுச்சிறிது ஆராய்வோம். முகம் இது
வடமொழிச் சொல் என்பர். வடமொழி
யமைப்புக்கு முற்பட்டதும் தனிமொழி
யின் தோற்றகாலத்தை யறிந்துரைக்கக்
கூடாததும் (அநிர்வசநீய மானதும்)
உயிர் படைப்புட னுள்ளதாய் உயிர்
படைப்பு என்று மிருப்பதால் அதனோடு
ஒப்ப நிகழ்வதாய தனக்கிணையின்றிய
தனித்தமிழ்த்தே முன்னின்மைக்கு எதி
ர்மறையாகாததும பின்னின்மை யென்
னும் அழிவுபாட்டின்மைக்கு எதிர்மறை
யாகாதது மாய மெய்ம்மொழியென்ன
(பிராகபாவ பிரத்தோம்சாபாவப் பிரதி
யோகியாகாதது நித்தியம்) இறப்பு, நிக
ழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்க
ளிலும் அழியாத உண்மை மொழியென்
னலாய் (திரிகாலா பாதிதம் நித்தியம்)
நிலைப்பேறுடைய அழியா மரபினோடு
உள்ளதுமாய் (சத்தாய்த்) தன் இனிமை
பரந்து தமிழ் எனப்பெயர் கொண்டு
ஒளிர்வதாம. (வரும்)

சோழ. க. சச்சிதானந்த முதலியார்,
2nd Asst., Corpn., School, Choolai.

இன்ப நூல்

அல்லது

அகப்பொருள் ஆராய்ச்சி

(பத்திராசிரியர் சி. மு. நடேச முதலியார் எழுதுவது)

மக்கள் உயிரும் உடம்பும் கண்ணுங் கருத்துமாய்ப் பேணுவதெல்லாம் இந்நில வுலகத்தே அடைதற் குரியதும் வீட்டுலகத்தை அடைவித்தற் குரியதுமான இன்பநுகர்தற் பொருட்டேயாம். இன்பம் வேண்டா ரொருவரே யாயினும் காண்டல் அரிதினுமரிதே. ஆயின், இன்பந்தான் நுகர்கின்றனரோ? வெனின், இல்லை. அற்றாயின் எவருந் துன்பமே நுகர்வார்தாமோ? வெனின், அங்ஙனமு மன்று! ஆயின், இன்னாதவெல்லாம் இனியவாய்ப் பிறழ உணர்ந்து அவற்றை நுகர்தலே பயனாக்கொள்வர். பன்னாட்டின்பம் பயக்கும் சின்னாளின்பம் எண்ணில; அவற்றாற் போந்த பயன் என்னை? இருவகை யுள்ளும் உறுவகையோர்ந்து பெறுவன பெற்று இன்பம் பொருந்துவதே ஆறறிவுடைய மக்கள்தங் கடனன்றே?

இன்பம் பல துறைகளினின்றும் பெறுதல் கூடும். ஆயின், இன்பம் எனப் பெறுவது யாதனை? யெனின்,

‘கண்டு கேட்டுண் டுயிர்த்துற் றறியு மைம்புல
னொண்டொடிக் கண்ணேயுள.’ [னும்

என்ற தமிழ் மறையின்படி, ஐம்புலன்களானும் ஒருசேர அடைதற் சிறப்பினையுடைய இன்பத்தினையே இன்பம் எனப்படும். இஃதன்றோ இன்பம்!

இதுகொண்டன்றே தொல்காப்பியனாரும் பிறசான்றோரும், ‘இன்பமும் பொருளு மென்றாங் கன்பொடு புணர்ந்த ஐந்திணை’ எனச் சிறப்பித்ததும்? பொருள்நூல் எனத்தனியே வகுத்ததும் இதனையே யன்றோ?

“பொருளிலக்கணம் மற்றை நான்கினுஞ் சிறப்புடையது. எக்காலத்துமெவ்விடத்தும் யாவரானும் அறிந்து பயனெய்துதற் குரியதும், எய்தத் தகுவதும், எய்தவேண்டுவதும், எய்தப்பெறுவதும் பொருள் ஒன்றே பிறிதில்லை.” என அகப்பொருள விளக்கப் பதிப்பாசிரியர் யாழ்ப்பாணம் திரு அறிஞர் சிவாநந்தையர் அவர்கள் மொழிந்தது உண்மையே யன்றோ?

முற்றத் துறந்த முனிவர் சச்சிதாநந்தரும் ‘திருக்குத்திருசியம்’ என்ற தமது வேதாந்த நூலுள்ளும் இதன் உண்மையை விளக்குவரெனின் வேறு கூறுவதென்?

“ஈண்டுப் பொருளென்றது அகம்புறமென்னும் இருகூற்றுப் பதினாற்றிணைப் பகுதியவாய்ச் செய்யுளிற் பாடுதற்குரிய இன்ப முதலிய வுலகியற் பொருளை. ஈண்டுக் கூறும் பொருட் பாகுபாடுகள் தமிழிற்கே சிறந்து வேறொன்றாற் பெறப்படாமையின், இப்பொருள் பற்றி வரும் பரிபாடல், கலி, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, ஆற்றுப்படை, பதிற்றுப்பத்து முதலிய செய்யுளாராயப் புகுந்தார்க்கு இப்பொருட்பாகுபாடுணராக்காற் குன்றுமுட்டிய குரீஇப்போல விடர்ப்பட்டுச் செய்யுள் மொழித்திறமுணரமாட்டாமையாற் செய்யுள் மொழித்திற முணர்ந்து செந்தமிழியற்கை சிவணுதற்கு ஒருதலையானோதல்வேண்டுமென்க.” என்று பொருள்நூல் உணர்தல் இன்றியமையாததெனவும், தமிழிற்கே சிறந்தது எனவும் வலியுறுத்துவர் சிவஞான முனிவர்.

இவ்வின்பமேனும் பிறிதேனும் எய்துவதொன்றை எய்துமுறைப்படி யெய்தினன்றே குறித்த பயனை அடைதல் கூடும்? இஃது இயல்பே. எனவே, இதற்குமோர் முறைநூல் இயற்றுவதாயினர் முன்னோர். அஃதே பொருள்நூல் எனப் பெயர் பெறும். இப்பொருள்நூல் வகுத்த முறையானே அவர் இன்பந் துய்த்தனராக. இதற்குச் சான்று வேறு வேண்டா. என்னெனின்? காலவேறுபாட்டால் பொருள்நூல் இழக்கநேர்ந்த காலையில், அதனைப் பெற்றாலன்றிப் பிறிதெல்லாம் பெற்றிருந்தும் பயன்பெறேம் எனப் பெரிதுங்

கவன்று மீண்டு பெறுவான் வேண்டி இறையவர்பால் முறை செய்து அவனருளாற் பெற்று இன்பமெய்தினர் என்றறிதலானென்க.

இது முறையே நாலிரண்டாயிரம் ஒரிரண்டாயிரம் யாண்டுகட்கு முந்தியதாம். எனின், மிகப் பழைய அக்காலத்தே தானே இன்ப ஒழுகலாற்றுக்குரிய நல்ல முறைநூல் வல்லார்வழி வாய்க்கப்பெற்றிருந்தனரென்பதும், அம்முறையானே இன்பந்துய்த்தனரென்பதும், இழுக்க நேர்ந்தும் ஒழித்திருக்க ஒருப்பட்டாரில்லையென்பதும் தெள்ளிதினறிகின்றோம். ஆயின், இன்று அந்நூற்களை அறிவார்தாமும் அரியரெனின் அம்முறையானே இன்பம் நுகர்வார் எண் எண்ணுதற்கு முண்டுகொல்!

என்னே! இன்பம் என்ற பெயரளவானே பேரவாக் கொண்டு பயனென்! அதனை முறையினுகர்ந்து பயனடைதற்குரிய நூற்களை ஆராய்தலொழியின் எங்ஙனம் பெறுமின்பம்! எமக்கொரு செயலுமின்றி முன்னே தானே அறிவினுக் கழகணிந்தாரன்ன அறிஞர் என்றும் இயற்கையிற் றிரியாமுறையின் ஆய்ந்து யாத்தனராக. அச்செயற்கரிய செய்தார்க்கு எழுமையும் கடப்பாடுடைத்தாதல் கடனன்றே? ஆயின் ஆண்டாண்டாகக் கடப்பாடறியாக் காலமே கழிகின்றது! என்னை? அவர் அரிதின் அளித்தன சிறிதின் ஆயினும் பேணுதலில்லையாகலான்.

எளிதின் விலை பகரவொண்ணா எண்ணில் எழிலடங்கும் இரத்தினக்கல்லொன்றை எளியானொருவனுக் களித்து இதனானே உய்தி எனின், என்செய்யும் அவ்வேழை யறிவிலி? தகை யறியான் நகையாடுதலாமென உன்னிக் கீழெறிந்திட்டேகும்! அதனையே பல்வகைத் துறையினும் நல்வகை யோர்ந்த அறிஞன் அடையின் அவன் யாது புரியும்? எனின், உயிரினும் அருமையாக் கொடுபோய் இஃது மன்னனுக்கே தகுதியென உன்னி அவன்பால் சேர்ப்பித்துப் பற்பன்னூராயிரம் பொன் பரிசிலாப் பெற்று நலமுற்று வாழ்வான். இன்று யாமும் எவ்வகையினும் சிறப்புடைப் பொருளைப் பொருளாக் கருது மாற்றல் அறவே ஒழிந்திருத்தல் ஏழை அறிவிலியின் செயலில் மாறுபட்டதன்றன்றே?

இப்பொருள்நூல் ஒன்றை அடைதலானே உயிர்க்குறுதி கூட்டும் நாற்பொருளும் பெறுதல் உண்மையால் இனியேனும் வாணாளை வீணாளாக் கழித்தலின்றி இப்பொருள்நூல் முறையின் சான்றோர் வாயறிதல் எவர்க்கும் இன்றியமையாக் கடனென்பதறிக. முன்னெல்லாம் இப்பொருள்நூல் கிடைத்தல் மிக அரிதே! ஆயின் இதுபோழ்து இருபெருஞ் செல்வமும் கழிபெரும் அளவின் வாய்ந்த ஒள்ளியோர் பலரால் பொருள்நூலேயன்றி அதன் இலக்கியங்களான பல அரும் பெரும் அகப்பொருள் நூற்களும் பெறுதல் எளிதாயிற்று. ஆயின், அவை புலமையின் மிக்க பெருமகாருக்கே பொருள் விளங்கும் பெற்றியவாம்.

இவற்றுள் பொருள்நூலை உரைநடையில் யாத்து எவர்க்கும் பயன்படச் செய்ய வேண்டுமென, இவ்வகையில் எம் உள்ளத்தை உந்தா நிற்பதாயிற்றோரெழுச்சி. அஃதெடுத் தியம்பும் பெற்றித்தன்றே! அவ்வெழுச்சியான் உந்தப்பட்ட யாம் எம் அறிவாற்றலையும் குறியாது இதனை மேற்கொண்டாம். கொண்டு, ஓர் ஆராய்ச்சி வகையான் இவ்வுரைநடை யாத்து வருவம்.

முதலில் இதனைப் புத்தகமாக வெளியிடக் கருத்துற்றேபாயினும், எமக்குரிமையினுள்ள அச்சுக்கூடத்தானும் பிறவற்றானும் உள்ள பல நெருக்கங்களோடும் இதனை விரைவில் வரைந்து முடித்தற்குப் போதிய காலம் கொள்ள இயலாமையின் இதுபோழ்து இச் சிந்தாமணியின் சீரிய விதழ்களில் இடுவான் நேர்ந்தேம்.

இன்ப நூல் என்று பெயரிட்டனம் இதற்கு. என்னை? யெனின்; இன்பத்தினையே விளக்கும் பெற்றித்தாகலின் என்க. "இன்பமும் பொருளும்" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் முதற்கண் தொடங்கி யுள்ளமையும்; இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர்

முதலாய உரையாசிரியர் பலரும் ஏற்றிருத்தலையும் உணரின் விளைவிலையாம்.

இந்நூல் பண்டையோர் வகுத்தமுறையானே மூன்று இயல்களில் முடியும். அவை அகத்திணையியல், களவியல், கற்பியல் என்பன.

இவ்வுரைநடைதொகுத்தற்கண் எமக்குத் துணையாயிருப்பன: இளம்பூரணமும், நச்சினார்க் கினியமும், களவியலுரையும், திருக்கோவையா ருரையும், அகப்பொருள் விளக்க உரையும் என்க.

யாம் சின்னாட்களாக எவையும் தனித்தமிழ் நடையில் எழுதுவதே முறையாக் கொண்டிருத்தல் இச் சிந்தாமணியை அறிவார் அறிந்ததே. எனவே, இதனையும் தனித்தமிழ் நடையிலேயே தொகுக்கின்றாம். எனினும், உரையாசிரியர் முதலியோரது ஆட்சியிலுள்ள பிறமொழிச் சொற்களை உள்ளபடியாள்கின்றாம்.

இங்ஙனம் இத்தகைய துறைகளிற் புகுதற்கு எமக்கு ஆற்றலுண்டாயது எமதாசிரியப் பெருந்தகையாரான திரு அறிஞர் மா. வடிவேலு முதலியார் அவர்கள்பாற் பெற்ற அறிவினாலாகலின் அச் சீரியர் மாட்டு என்றுங் கடப்பாடுடையேம்.

சீரிய அறிஞர்க்கே உரித்தான இத் தொழிலில் சிற்றறிவினன் புக்கது புலமையின் முன்னிட்டன்றி பொதுநலங் கருதியா மாகலின் இது இழுக்கன்றே.

இதன்கண் காணுறும் பிழைகள் எவையாயினும் அவை எஞ் சிற்றறிவின் செயலேயெனப் பெரியோர் பொறுக்க.

கடவுள் வணக்கம்.

இன்ப நுகர்ச்சிக்குரிய ஐந்திணைகளுக்குள்ளே குறிஞ்சியங் கடவுளாவாரும், ஈடுமெடுப்புமில் இறையனார் பொருளை ஏடுமெழுத்தால் உலகுக்கீந்த தக்கார் பணியும் நக்கீரன்றன் ஆற்றுப் படைதனை ஏற்றுகந்தாரும், ஒப்புயர்வு காணா உயர்தனிச் செம்மொழியாந் தமிழினுக்குரிய முழுமுதலாவாரும், எந்தைக் கோரெந்தையாய் என்றும் வழிபட வந்தருளினாரும், யாமறக்கினுமெமது நாமறக்கிலாவருள் அருளினாருமாந் திருமுருகக் கடவுளே இவ்வின்ப நூல் தொகுக்க எமக்கின்பமூட்டிய தோன்றாத் துணைவராகலின், அவரது அருந்துணைவரே இஃது இனிது நிறைவுறத் திருவருள் புரிவாராகவென அவர் தம் இணையடித் தாமரைப் போதினை எமதுள்ளமெனுங் கூடத்திருத்தி இறைஞ்சுகின்றாம்.

அகத்திணையியல்

அகத்திணையியல் என்றது இன்பமாகிய ஒழுக்கத்தினது மரபாம். அகம்-இன்பம்; திணை-ஒழுக்கம்; இயல்-மரபு.

மரபு-இலக்கணம்-முறைமை-தன்மை என்பன ஒரு பொருட்கிளவி என்பர் நச்சினார்க்கினியர்.

இயற்றியவர்.

அகத்திணையியல் பொருளதிகாரத்தின்பாற் பயில்வது. "பொருளாவது; அறம் பொருள் இன்பமும், அவற்றினிலையாமையும், அவற்றினீங்கிய வீடு பேறுமாம்" என்பர் நச்சினார்க்கினியர். பொருளதிகாரம் இயற்றியவர் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனார். இவர் அகத்தியர் மாணவர் பன்னிருவருள் தலையாயார். சமதக்கினியார் மகனார். திரணதூமாக்கினி என்னும் இயற்பெயருடையார்.

"மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர்தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே."

—பனம்பாரனார்.

தொல்காப்பியர் காலம்.

இந்நூல் இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகட்கு முன் கடல்வாய்ப் பட்டு அழிந்த தலைச்சங்கத்தின் இறுதியில் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அரங்கேற்றப் பட்டதென நூலாராய்ச்சியால் அறியக்கிடக்கிறது. இதனால் இவர் காலம் இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகட்கு முந்தியதாம். இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தனர் என்பர் நச்சினார்க்கினியர்.

தொல்காப்பியம்.

இவர் செய்தது பொருளதிகாரம் மட்டுமன்று எழுத்துச் சொல்பொருள் என மூன்று பெரும்பிரிவுடைய ஐவகை

மரபு (இலக்கண) நூலாம். அதுவே **தொல்காப்பியம்** எனப்பெறும். யாப்பும் அணியும் பொருளுள் அடங்கும். தொல்காப்பியர் இதனை எண்ணாயிரம் அகவல்களால் யாத்தனர் என்ப. இப்போது கிடைத்துள்ளன கசுகஉ அகவல்களே.

நூற் சிறப்பு.

இந்நூல் இற்றைக்கு மிகப் பழைய காலத்தது என்பதை முன்னமே அறிந்தோம். அக்காலத்து தனித்திருந்து எவ்வகைச் செல்வமும் எளிதில் அடைந்து துன்பமே அறியா இன்ப வாழ்க்கையில் திளைத்திருந்த நம் தண்டமிழ் மக்களின் வழக்கவொழுக்கங்களும் அறநெறி முறையும் அரசியல் மரபும் நன்கு விளக்கும் சிறப்புடையது. அக்காலத்தார்க்கும் இக்காலத்தார்க்கும் பிற்காலத்தார்க்கும் அழியா மரபு நூலாய் (இலக்கணமாய்) இருந்தொளிர்வது.

''பல்காற்பழகியுந் தெரியாவுளவேற்
றொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கும்''

என்பர் சான்றோரும்.

உரையாசிரியர்.

இத்தகு சீரிய நூற்கு உரை செய்தார் இளம்பூரண அடிகள், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் என ஐவராவார். எய்ப்பில் வைப்பாய் பொருள் ஆழ்ந்து கிடக்கும் இவ்வரிய நூற்குத் திறவுகோல் போன்று இவர்கள் உரை செய்திலரேல் இக்காலத்துக் கல்வியின் துறைபோகிய பேரறிஞர்க்கும் எளிதிற் பொருள் விளங்குவது அரிதாம். இந்நூற்கு முதற்கண் உரைகண்டார் இளம்பூரண அடிகளே என்ப. இவர் உரையாசிரியர் எனச் சிறப்பாக வழங்கப் பெறுவர். தவிர, இவ்வுரையாசிரியருள் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரே,

"எவனலை வாயிடை வந்தமுத வாயுடைய
[னென வியம்பப் பெற்றோன்
எவன் பண்டைப் பனுவல்பல விறவாது நில
[வவுரை யெழுதி யீந்தோன்
எவன்பரம உபகாரி எவனச்சினார்க் கினி
[யன் எனும் பேராளன்
அவன்பாத மிருபோது மெப்போது மலர்க
[வென தகத்து மன்னோ"

என நுண்மாண் புலமையரால் விதந்தோதும் பெற்றியாளர்.

இவர் இவ்வொரு நூலுக்கேயன்றி அரிய பல நூற்களுக்கும் உரை இயற்றித் தந்தாரென்பது பின் காணும் வெண்பா விளக்கும்.

பாரத்தொல்காப்பியமும்பத்துப்பாட்டுங்கலியு
மாரக்குறுந்தொகையுளைஞ்ஞான்குஞ்—சாரத்
திருத்தகுமாமுனி செய்சிந்தாமணியும்
விருத்திநச்சினார்க் கினியமே.

இது கற்கப்பயன் யாதோ வெனின்?

பயன்.

மக்கள் அகவிருள் அறவே யொழிந்து உயிர்க்கு உறுதிகூட்டும் அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும் நாற்பயன் அடைதலாம்.

'எழுத்தறியத் தீருமிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பானாகு—
[மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன்முதனூற் பொருளு
கட்டறுத்து வீடுபெறும்.''
[ணர்ந்து

என்பர் சான்றோரும்.

இந் நாற்பொருளுள் அறமாவது யாதனை யெனின்?

அறம்.

நிறைமொழி மாந்தர் அருளியாங்கு நன்னெறிக்கண் ஒழுகி செய்வன செய்தலும் ஒழிப்பன ஒழித்தலுமாம்.

'செயற்பாலதோரும் அறனே யொருவற்
குயர்ப்பால தோரும் பழி.'

என்பர் பொய்யில் புலவர்.

பொருள்.

பொருளாவது: செல்வமும், செல்வ நிலையாமையும், அரசியல்முறையும், அரசர் கடமையும் என்பன.

'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லைபொருள்.'

'ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு எண்
ஏனை யிரண்டு மொருங்கு.'
[பொருள்

'முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்
[கட்கு'
இறையென்று வைக்கப்படும்.'—திருமறை.

இன்பம்.

இன்பம் எனப்படுவது 'ஒரே காலத்தில் ஒரு பொருளால் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்கின்ற ஐம்புலன்களையும் அநுபவித்தற் சிறப்புடைத்தாகிய

காம இன்பத்தினை' என்பர் பரிமேலழகியார்.

வீடு. இனி, வீடாவது மேற்போந்த மூவகை நெறிகளின் முடிந்த பொருளாய்ப் பிறவிப் பெருந்தளையி னின்றும் விடுபடுவதோர் பெரும்பேறாம். இது நூல் முறையால் உரைக்கப்பெறும் இயல்புடையதன்று என்ப.

"வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின்தன்மை அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் கூறாரென்றுணர்க" என நச்சினார்க்கினியரும்;

"வீடென்பது சிந்தையு மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம" எனப் பரிமேலழகியரும் கூறுவர்.

பொருட்பாகுபாடு. உலகத்து நிகழத்தக்க செய்திகள் யாவும் அகப்பொருள் புறப்பொருள் என இரண்டு வகையுள் அடங்கப் பெறுவனவேயாகலின் ஒன்றுகதொன்று இயைபுடைய இதனைப் பொருளதிகாரத்தின் முதலில் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பாகுபடுத்தினர் ஆசிரியர்.

புறப்பொருள். அகப்பொருள் புறப்பொருள் எனும் இவ்விரண்டுள் புறப்பொருள் இனைத்தென ஈண்டு முன்னர் அறிவாம. புறப்பொருளாவது: அறத்தினையும் பொருளினையும் பொதுவாகவும், மக்கள் மரபினையும் அரசர் ஒழுகலாற்றினையும சிறப்பாகவும், வீடுபேறினைக் குறிப்பாகவும் உணர்த்துவதாம்.

"புறப் பொருளாவது மறஞ் செய்தலும் அறஞ் செய்தலும் ஆகலான் அவற்றானய பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்றார்" எனவும்,

"நிரைகோடல், பகைவயிற் சேறல், எயில் வளைத்தல், இருபெரு வேந்தரும் ஒருகளத்துப் பொருதல், வென்றி, நிலையாமை, புகழ்ச்சி என எழு வகைப்படும" எனவும் கூறுவர் இளம்பூரணர்.

அகப்பொருள். இனி அகப்பொருளாவது: "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்ப முறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்" என நச்சினார்க்கினியரும்;

"அகம்புறம் என்பன காரணப்பெயர்கள். அகப் பொருளாவது போக நுகர்ச்சி யாதலின் அதனானய பயன் தானே அறிதலின் அகம் என்றார்" என இளம்பூரணரும் கூறுவர்.

இதனானே அகப்பொருளென்பது மக்கள் அகத்தே நிகழ்வதோர் இன்ப உணர்ச்சி என்பதாம்.

"இன்பத்தை நுதலிய தென்றதாயினும; இன்பந் தலைக்கீடாக அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு பொருளையு நுதலிற்று" என்பர் பேராசிரியர்.

அகப்பொருள் வகை. இனி இவ்வகப் பொருளினது மரபை (இலக்கணத்தை) முறையே அறிவாம. அகப் பொருளாவது கைக்கிளை, ஐந்திணை, பெருநதிணை யென வகைப்படுத்தப்படும். இவையே எழுதிணை என்னப்படும்.

'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப.'
(தொல்-பொ-அகத்-௧.)

'மலர்தலையுலகத்துப் புலவோராய்ந்த
அருந்தமி ழகப்பொருள கைக்கிளை யைந்திணை
பெருந்திணை யெனவெழுபெற்றித தாகும்'
(அகப்பொருள் விளக்கம்-௧.)

கைக்கிளை. கைக்கிளை யென்பது தலைவன் தலைவி இவருள் ஒருவர்பால் நிகழும் காதல் ஒழுக்கமாம். தலைவியைத் தலைவனாவது தலைவனைத் தலைவியாவது கண்டதும் அல்லது கேட்டதும் கொள்ளும் காதல் உணர்ச்சியாம. காதல இருவர் மாட்டும் ஒத்து நிகழ்ந்தாலன்றி இன்பம் கூடா

தாகலின் இது சிறுமையுறவு எனப் படும்.

"ஒரு மருங்கு பற்றிய கேண்மை" என்பர் நச்சினார்க்கினியர்.

"கைக்குடை, கையேடு, கைவாள் எனப் பெருமை யில்லாதவற்றுக்கு வழங்குவதுபோல் இதனையும் கைக்கிளை யென வழங்குபவாகலின் பெருமையில் லாதார் உறவு." என்பர் இளம்பூரணரும்.

கைக்கிளையின் மரபு இனைத்தென ஒரு செய்யுளால் விளக்குவர் தொல்காப்பி யர். அது,

'காமஞ் சாலா விளமை யோள்வயின்
ஏமஞ் சாலா விடும்பை யெய்தி
நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற்
றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.'
(அகத்-௫௧)

இச் செய்யுளுக்கு நச்சினார்க்கினியர் பின் வரும் உரை யெழுதுவர் :

"காமக்குறிப்பிற்கு அமைதியில்லாத இளையாள் ஒருத்தி கண்ணே ஒரு தலை வன் இவள் எனக்கு மனைக்கிழத்தியாக யான் கோடல் வேண்டுமெனக் கருதி மருந்து பிறிதில்லாப் பெருந்துயரெய்தி தனது நன்மையும் அவளது தீங்கையு மென்கின்ற இரண்டு கூற்றான் மிகப் பெருக்கிய சொற்களை தன்னொடும் அவ ளொடும் கூட்டிச் சொல்லி அச்சொல்லு தற்கு எதிர்மொழி பெறாதே பின்னுந் தானே சொல்லி இன்புறுதல் பொருந் தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு" என்பதாம்.

தனது நன்மையும் அவளது தீங்கை யும் என்றல் : தன் காதல் மிகுதியும் அவள் உறுப்புகளின் பேரெழில் கூற் றம்போலும் தன் உள்ளத்தை வாட்டும் தன்மையுமாம். தன்னொடும் அவளொடு மென்றல்: தன்னெஞ்சொடு கூறியும் அவளொடு நேரே விளித்துக் கூறுவது போல் தனக்குத்தானே கூறிக்கொள் வதுமாம்.

இக்கைக்கிளைக் குறிப்பினுக்கு கலித் தொகையினின்றும் ஒரு செய்யுள் எடுத் துக் காட்டுவர் இளம்பூரணர். அது,

'ஊர்க்கா னிவந்த பொதும்பரு ணீர்க்காற்
கொழுநிழன் ஞாழன் முதிரினர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவன்மிசைத் தாதொடு தாழ வகன்மதி
தீங்கதிர் விட்டது போல முகனமர்ந்
தீங்கே வருவா ளிவள்யார்கொ லாங்கேயோர்
வல்லவன் றைஇய பாவைகொ னல்லா
ருருப்பெல்லாங் கொண்டியற்றி யார்கொல்
[வெறுப்பினால்
வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொ
[லாண்டார்
கடிதிவளைக் காவார் விடுதல் கொடியியற்
பலகலைச் சில்பூங் கலிங்கத்த ளீங்கிதோர்
நல் கூர்ந்தார் செல்வ மகள் ;
இவளைச், சொல்லாடிக் காண்பென் றகைத்து
நல்லாய் கேள் ;
ஆய்தூவி யனமென வணிமயிர் பெடை
[யெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழி
[னல
மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்
[கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியா
[யோ ;
நுணங்கமைத் திரளென நுண்ணிழை யணை
[யென
முழங்குநீர்ப் புணையென வமைந்தநின் றட
[மென்றோள்
வணங்கிறை வாலெயிற் றந்நல்லாய் நிற்கண்
[டார்க்
கணங்காகு மென்பதை யறிதியோ வறியா
[யோ ;
மூதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த
[குரும்பையெனப்
பெயருழி முகிழெனப் பெருத்தநின் னிள
[முலை
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்
[கண்டா
ருயிர்வாங்கு மென்பதை யுணர்தியோ வுண
[ராயோ ;
எனவாங்கு ;
பேதுற்றாய் போலப் பிறரெவ்வ நீயறியாய்
யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேளினி
நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப் [னி
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையணி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறை யறைந்தல்லது செல்லற்க வென்னா
விறையே தவறுடை யான்.'-(கலி-குறிஞ்-20)

இச்செய்யுளில் "இவளைச் சொல்லாடிக் காண்பேன் றகைத்து; நல்லாய்கேள்;"-

'இவளை, நல்லாய்! யான் கூறுகின்ற தனைக் கேள் என்று போகாமற்றடுத்து வார்த்தை சொல்லிப் பார்ப்பேன்' என நெஞ்சொடு கூறலும், "எனவாங்கு; பேதுற்றாய் போலப் பிறரெவ்வ நீயறியா யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேளினி"—'யான் கூறுநிற்க நீ மயக்க முற்றாய்போல் பிறருடைய வருத்தத்தை யறியாமலும் கேட்டார்க்கு யாதொன்றும் சொல்லாமலும் கழிந்து போகின்ற வளே! இப்போது யான் கூறுகின்ற தனைக் கேள' என உண்மையில் அவளை இடைமறித்துச் சொல்வதுபோல் தானே கூறலும் வந்தமை காண்க. நிற்க,

(தொடரும்)

மார்க்கண்டேயர்

கூத்து. (ககசு-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பு-க. **ரு-வது களம்.**

(பள்ளிக்கூடத்தில் நல்லாசிரியர் நல்லந்துவனார் என்னும் கணக்காயர் வருவதற்கு முன்னர் விடியற்காலையில் கல்வி பயிலும் மாணவர்கள் வந்து ஆட்டயர்தல்)

சட்டம்பிள்ளை சாத்தன்:—அடே மருதா, கடம்பா, கதிர்வேலா, அழகப்பா நம் கணக்காயர் வரும் வேளை, எல்லோரும் அவரவர் இடங்களில் உட்கார்ந்து சுவடி யோதுங்களடா. (என்று சொல்லிவிட்டு உலாவல். மற்றவர்கள் அமர்ந்து சுவடியெடுத்தல்.)

கடம்பன்:—ஏ சட்டம்பிள்ளை, நீ மட்டும் உலாவுகிறதோ? நாங்கள் எல்லாம் எங்கள் இடுப்பு நோவும்படி உட்கார்ந்துகொண் டிருக்கவேண்டுமோ? நீ உட்காருகிறாயா என்ன? என்ன சொல்கிறாய்?

சட்டம்பிள்ளை:—நான் உட்கார மாட்டேன். என்ன செய்வாயடா நீ?

கடம்பன்:—நான் என்ன செய்வேனா? பார்க்கிறாயா? பார்க்கிறாயா?

சட்டம்பிள்ளை:—பாரடா சற்று; சிறிது பாரடா. என்னை நன்றாய்ப் பாரடா.

கடம்பன்:—இதோ பார்க்கிறேனடா, டே மருதா, அழகா, வேலா வாருங்களடா இப்பக்கம் எல்லோரும் சேர்ந்து இவனைப் பிடியுங்கள், கட்டிப் போடுவோம, வாருங்களடா. (எல்லோரும் சட்டாம்பிள்ளையின் கண்களைக் கட்டிவிட்டு, கை கால்களைப் பிடித்துக்கொண்டு உயரத்தூக்கித் திரிதல்.)

சில பிள்ளைகள்:—வேல்முருகா—

மற்றவர்கள்:—ஏறுமயிலா—

சில்லோர்:—சேவற்கொடியா—

மற்றோர்:—ஆறுமுகவா—

சில்லோர்:—கண்ணுதலோன் புதல்வா.

மற்றோர்:—கயற்கண்ணாள் மதலா (என்று சொல்லித் திரிந்துகொண் டிருந்த வேளை கணக்காயர் வருதலை யறிந்து அவனைக் கீழே போட்டு விட்டு அவரவர் இடங்களி லமர்ந்து அமைதியாய்ச் சுவடியேந்தி யோதல்.)

நல்லாசிரியர் நல்லந்துவனார்:—அடே சாத்தா, கண்மூடி யாட்டமா ஆடுகின்றாய்? நன்றாயிருக்கிறது. சட்டாம்பிள்ளையாகிய நீயே இப்படியாடினால் மற்றப் பிள்ளைகள் ஆடுவதைக் கேட்கவும் வேண்டுமா? கை நீட்டு—நீட்டு கையை—(கைத்தடியால் அடிக்கத் தடியை யுயர்த்தல்.)

கடம்பன்:—ஆமாம் ஐயா, அவன்தான் எங்களை யெல்லாம ஆடும்படி கூப்பிட்டான் ஐயா.

சாத்தன்:—(அழுதவண்ணம் தன் கண் கட்டை யவிழ்த்தபடியே) ஐயா எல்லோரும் சேர்ந்துகொண்டு என் கண்

ணைக் கட்டி என்னை மேலே தூக்கி யாட்டமா யாட்டினார்கள் ஐயா. இந்த கடம்பன்தான் இப்படியெல்லாம் செய்தான். இவனோடு எல்லோரும் சேர்ந்துகொண்டார்கள் ஐயா. (என்று தேம்பியபடியே கூறல்.)

நல்லந்துவனார்:—ஏனடா கடம்பா, இங்கே வா. உனக்கு இவ்வளவு செருக்கா. உனது சிறுபிள்ளைத் தன்மைக்குத் தக்கபடி யொறுக்கிறேன் ; வா வா இப்படி. நாற்காலி யுட்கார். இன்றைக்கெல்லாம் இதுவே சட்டம். (இப்படி சொல்லிக்கொண் டிருந்த போது வைத்தீச்வரனும் மார்க்கண்டேயனும் வருதல்.)

ஏனடா வைத்தீச்வரா, மார்க்கண்டா, ஏன் இவ்வளவு நேரம் நீங்கள் வர.

வைத்தீச்வரன்:—ஐயரே, என்றன் அம்மா இன்றைக்கு வைத்தீச்வரன் கோவிலுக்குப் பூசை நடத்த நேரமாயிற்று. அந்த பூசை முற்றுப் பெற்றதும் புறப்பட்டேன் நான்.

நல்லந்துவனார் :—(மார்க்கண்டனைப் பார்த்து) நீ வர ஏன் நேரமாயிற்று?

வைத்தீச்வரன்:—மார்க்கண்டன் அம்மா இன்றைக்கு மகேச்வர பூசை நடத்தி யனுப்பினார்கள் ஐயரே. அதனால்தான் அவனும் நேரஞ் சென்று வந்தான்.

நல்லந்துவனார்:—என்னடா அது வைத்தீச்வரா? உனக்கு நேரமானதைப் பற்றி நீ வைத்தீச்வரன் கோவில் பூசையாயிற்றென்கிறாய்; அவனுக்காக நீ மகேச்வர பூசை நடந்தது என்கிறாயே என்ன பூசையடா உங்களுக்கு மட்டும் நேர்ந்தது ?

வைத்தீச்வரன்:—ஐயரே, இதை யறியீர்களா நீங்கள்? வயித்தீச்வரன் கோவில் பூசை யென்றது—வயிற்றுக்குச் சாப்பாடு போடுவது என்பது; மகேச்வரபூசை யென்பது அடியார்களுக்கு அடிசில் படைப்ப தென்றல்லவோ வழங்கி வருகிறது! தங்கள் அடியனாகிய மார்க்கண்டனுக்கு அவனது தாயார் அடிசிலுண்பித்தார்கள் என்பது கருத்து. ஆக நாங்களிருவரும் சாப்பிட்டோம். சாப்பாட்டு வேலையில் பள்ளிக்கூட வேளை தாழ்ந்தது. அதன் பொருட்டான பிழையைப் பொருத்தருள வேண்டுகின்றோம்.

நல்லந்துவனார்:—நன்று நன்று உனது அறிவு; வெகு நன்று. ஆ! ஆ! என்ன நுண்ணறிவடா உனக்கு.

கதிர்வேலன்:—ஐயா ஒருநாள் ஒரு துறவியார் வைத்தீச்வரன் வீட்டுக்கு வந்திருந்தார். வைத்தீச்வரன் கல்வி கற்பது முதலியவற்றைக் கேட்டுப் பின் உனக்குக் கல்வி கற்பிப்பவர் யார் அவர் பேர் என்ன ? என்று கேட்டார். அதற்கு இவ் வைத்தீச்வரன் என்ன சொன்னான், தங்களுடைய பேரை யிவன் அறிந்திருக்கிறபடியைக் கேட்டுப் பாருங்கள்.

நல்லந்துவனார் :—வைத்தீசா — என்ன சொனாயடா? என் பெயர் என்ன சொல் கேட்டறிவோம்.

வைத்தீச்வரன்:—தங்கள் பேரா ஐயரே.

நல்லந்துவனார்:—ஆமாமடா.

வைத்தீச்வரன்:—நல்ல வெல்லந் தின்பவர்.

நல்லந்துவனார்:—என்ன! என்ன!

வைத்தீச்வரன்:—நல்ல வெல்லந் தின்பவர் ஐயரே.

நல்லந்துவனார்:—நன்றா யிருக்கிறது! வெகு அறிவுடையவன் ! !

வைத்தீச்வரன்:—(மற்றப் பிள்ளைகளைப் பார்த்து) பார்த்தீர்களாடா உங்களுக்கு இந்தப் புகழ் வந்ததா? எல்லாரும் சேர்ந்துகொண்டு என்னை மூடனாக்க முயன்றீர்களே ! பாருங்கள் இப்போது !

நல்லந்துவனார் :—போதும் போதும்! உன்னறிவின் விளம்பரம். இனிமேல் என் பேரை யப்படி சொல்லாதே.

வைத்தீச்வரன்:—பின் எப்படி ஐயரே சொல்லவேண்டும் ?

நல்லந்துவனார்:—நல்லந்துவனார் என்று சொல்லு.

வைத்தீச்வரன்:—நல்லவெல்லந் தின்றவர் என்னவேண்டுமா அல்லது நல்ல வெல்லந் தின்பவர் என்ன வேண்டுமா

ஐயரே.

நல்லந்துவனார்:—நல்லந்துவனார் என்று சொல்லடா.

வைத்தீச்வரன்:—ஓ தெரிந்து கொண்டேன்! தி யென்று வரக்கூடாது து வென்று வரவேண்டும். சரிதான் பிடித்துக் கொண்டேன்! நல்லவெல்லந் துன்றவர்—சரிதானா ஐயரே?

நல்லந்துவனார்:—ம டை ய ா நல்லந் சொல்லு.

வைத்தீச்வரன்:—நல்லந்

நல்லந்துவனார்:—துவனார்.

வைத்தீச்வரன்:—துவனார். அறிந்தேன் ஐயரே.

நல்லந்துவனார்:—சரி இ ர ண் டை யு ஞ் சேர்த்துச் சொல்லு.

வைத்தீச்வரன்:—நல்லவெல்லந் துன்றவர்.

நல்லந்துவனார்:—சை அறிவிலி, இப்படி சொல். நல்-அம்-துவ-னார்.

வைத்தீச்வரன்:—நல்-அம்-துவ-னார்.

நல்லந்துவனார்:—நான்கையும் சேர்த்துச் சொல்.

வைத்தீச்வரன்:—நல் அம் துவ னார்-நல்லந்துவனார். அறிந்தேன் அறிந்தேன் அறிந்தேன் அறிந்தேன். நாலையும் நன்றாய் அறிந்தேன். அட பிள்ளைகாள் என்னோடுகூட நீங்களும் சரியாசொல்லிக் கற்றுக் கொள்ளுங்களடா வாருங்கள் இங்கே (பிள்ளைகள் எல்லாரும் எழுந்துவந்து கணக்காயரைச் சுற்றி நிற்றல்) நல் (தான் கைத்தட்டல் போடல்) அம் (தட்டல்) துவன் (தட்டல்) ஆர் (தட்டல்).

நல்லந்துவனார்:—பிள்ளைகாள்! அந்தப் பெயருக்கு முன்னதாக நல் ஆசிரியர் என்று சேர்த்துச் சொல்லுங்கள்.

பிள்ளைகள்:—நல் (தட்டல்) ஆ சி ரி ய ர் (தட்டல்) நல் (தட்டல்) அம் (தட்டல்) துவன் (தட்டல்) ஆர் (தட்டல்) இப்படி எல்லாரும் தட்டியபடியே அந்த பெயரைச் சொல்லிப் பாடிக் கொண்டு க ண க் க ா ய ரை ச் சுற்றி வருதல்.)

நல்லந்துவனார்:—போதும் உங்கள் இடங்கட்குப் போங்கள். (பிள்ளைகள் செல்தல்) அட கடம்பா உன் பாடத்தை யொப்புவி.

கடம்பன்:—(கணக்காயர் பக்கலில் நின்று கைகட்டி) "கண்ணன் கடா மாட்டின்மேல் ஏறினான்."

நல்லந்துவனார்.—அந்ததொடரில் எழுவா யெது? சொல்.

கடம்பன்;—கடா அழுவாய்.

நல்லந்துவனார்:—கடாவா?

கடம்பன்:—கண்ணன் அழுவாய்.

நல்லந்துவனார்:—என்ன? அழுவாயா? எழுவாய்?

கடம்பன்:—இழுவாய்—

நல்லந்துவனார்:—எ ழு வா ய்—

கடம்பன்:—எழுவாய்.

நல்லந்துவனார்:—அதையே சொல்லிக் கொண்டிரு போ. அதுதான் நாளைக்குப் பாடம். மார்க்கண்டா, நீ யொப்புவி உன் பாடத்தை.

மார்க்கண்டேயன்:—ஐயா எ ன க் கு ப் பாடமெல்லாம் தெரியும். ஆனால், ஓர் நூலில் ஓர் வரிக்குப் பொருள் விளங்கவில்லை.

நல்லந்துவனார்:—என்ன அது? சொல்.

மார்க்கண்டன்:—"சிவமெனும் பொருளும் ஆதி சத்தியொடு சேரின் எத் தொழிலும் வல்லதாம்."

நல்லந்துவனார்:—சரி சரி! உனக்கு இனிமேல் கல்வி கற்பிக்க முடியாது. இவ்வளவு அறிவு வந்தபின் நான் ஏன்? நீ வீட்டுக்குப் போகலாம். அடே சட்டம்பிள்ளாய் நீ யிவனையழைத்துப் போய் அவன் தந்தையாரிடம் விட்டு இவன் படிப்பு முடிந்தது, இனிமேல் இவனுக்குப் படிப்பு சொல்ல நல்லாசிரியரால் ஆகாது என்று சொல்லி விட்டுவிட்டு அப்படியே வீட்டுக்குப் போய் உண்டு விட்டு ஓடிவா. (இருவரும் போதல்).

(தொடரும்)

சோழ. க. சச்சிதானந்த முதலியார்,
Second Assistant,
Corporation School,
Choolai, Madras.

உறுதியின் உரம்

(கஉச-ம் பக்கத் தொடர்ச்சி.)

வரவேற்கு மறையிலுள்ள ஞானரத்தினம் வாயிலிலிருந்து வருகின்ற வொலியைக் கேட்டவுடனே "அடியே! சிவகாமி! என்ன இரைச்சல்? யார் அங்கே?" என்று வினவிக்கொண்டே கையில் விளக்கையெடுத்துக்கொண்டு வாயிற் கதவைத் திறந்து வெளியே வந்து இரைச்சலுண்டான இடத்தை நோக்கினாள். அதே வேளையில், சிவகாமியும் "ஐயோ! பெருந்தவ றிழைத்தேனே!" என்று சொல்லிக்கொண்டு கையை நெரித்து ஞானரத்தினத்தைப் பின்தொடர்ந்தாள்.

அவ்விருவரும் வலது திண்ணையை நோக்கிய வளவில், எச்சிலோடு கூடிய நீரால் புனலாடப் பெற்றவராய், நமது பெரியார் நளிரால் நடுங்கிக்கொண்டிருப்பதைக் கண்டனர்.

இக்காட்சியைக் கண்ட ஞானரத்தினம், உடனே நிகழ்ந்தவற்றையும், அப்பெரியாரையும் ஒருவாறுணர்ந்து நெஞ்சம் துடித்து, அவர்காலில் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கி மன்னிக்க மன்றாடி, உள்ளே அழைத்துச் சென்று வெந்நீரால மேனி விளக்கி, உலர்ந்த பட்டாடைகளை யணிவித்து அகில் சந்தன முதலிய நறுநாற்றப் பொருள்களின் நறும் புகையூட்டி நளிர் நீக்கி, புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி முதலியன கலந்த சந்தனம் பூசி, மகிழ், முல்லை முதலிய மலர்த்தொடையல்களைப் புனைந்து, அறுசுவை யுண்டியுமளித்து, வரவேற்கு மறையிலுள்ள ஒருயரிய இருக்கையின் அமர்த்தி, யாழ் முதலிய இன்னிசைக் கருவிகளால் மெலலொலி யெழுப்பி அவரை மகிழ்விக்கத் தொடங்கினாள்.

ஆனால், நமது பெரியார் துவாரகையில் கண்ணன் அரண்மனையில், அவனுக்கும், அவனுடைய மனைவிகட்கு மிடையிலகப்பட்டு விழித்த குசேலரைப் போன்று * ஒன்றுந் தோன்றாது தன்னறிவிழந்திருந்தார்.

எல்லாப் பணிவிடைகளும் முடிந்து இசைக்கருவிகளை யொலிக்கத் தொடங்கவே, தன்னுணர்ச்சி சிறிது தோன்ற நாற்புறமும் பார்க்கத் தொடங்கினார்.

தி:—ஆ! நானெங்கிருக்கின்றேன்? எனது பக்கலில் உள்ள இவர்கள் யார்? ஈண்டு ஆடவர்களின் அரவம் ஒரு சிறிதுங் காணவில்லையே! ஆடவர்களின்றிப் பிற மாதரிடையிற் சேறல் பிழையாகவன்றோ முடியும்! யான் இங்குச் சேர்ந்தது எங்ஙனம்?

என்று தனக்குட் சொல்லிக்கொண்டு தானமர்ந்திருந்த இருக்கையை விட்டெழுந்து வெளியே செல்லப் புறப்பட்டார். அதனைக் கண்ட,

ஞா:—அடிகாள்! வேளையோ நள்ளிரவாயிற்று. இருளோ கொள்ளிக்கும் விள்ளாது. மழையோ வருணனால் முன்னொருகால் மதுராபுரியை அழிக்கவிடுத்த எழுமுகில்கள்போற் பொழிகின்றது. § தங்கள் இல்லமோ அண்மைக்கணின்றி

---

* குசேலர், கண்ணன் அரண்மனையில் அவனுக்கும் அவன் மனைவிகட்கும் இடையிலகப்பட்ட வரலாறு:—சுதாமா என்னும் இயற்பெயருடைய இவர் தமதில்வாழ்க்கையில் வறுமை மேலிட்டுப் பள்ளித் தோழனாகிய கண்ணனிடஞ் சென்றால் நலமென அவன் மனைவியால் ஏவப்பட்டு மனைவி செய்து கொடுத்த அவல் என்னும் சிற்றுண்டியுடன் கண்ணன் அரண்மனைக்குச் செல்ல, கண்ணன் ஆவைக்கண்ட சேங்கன்றுபோற் குதித்தோடி எதிர்கொண்டழைத்து அந்தப்புரங் கொண்டு சேர்த்து, செழுமை வினவிப் பின் தானும் தன் மனைவிமார்களுமாக அவருக்கு எண்ணெய் காப்பிட்டுப் பட்டாடை யுடுத்து அமிழ்தன்ன வுணவளித்து, அவர் கொண்டு வந்த அவல் மூட்டையினை வாங்கி யதனையும் புசித்துப் புகழ்ந்து, பலவித செல்வங்களோடு வீட்டிற்குத் திரும்பவைத்தனன்.

§ வருணன் மதுராபுரியை அழிக்க முயன்ற வரலாறு:—வருணன் ஒருகால், சோம

ஊர்க்கு வெளிப்புறத்துளது. ஆகலான், தேவரீர் அருள் சுரந்து அடியாள் மனையில இன்றிரவைப் போக்கி வைகறையில் தங்கள் மனைக்கெழுந்தருளவேண்டுகின்றனன்.

எனவே, பெரியார் சிறிதாராய்ந்து பின் இருப்பிடத் தமர்ந்து பின் வருமாறு வினவுவராயினர்:—

தி:—ஓ! பெண்மணிகாள்! நீங்கள் யாவர்?

ஞா:—பெரியீர்! அடியேன் இவ்வூர் எம்பெருமான் திருமுன்னிலையில் ஆடும் கூத்தமாது. எனதருகிலிருக்கும் இவள் எனது தோழியாவள்.

தி:—யானிப்பொழுது யாருடைய மனையில் தங்கியிருக்கிறேன்!

ஞா:—இக்குடில் சிறியேனுடையதே.

தி:—தெருவில் இருக்கவேண்டிய எனக்கு நீங்கள் இவ்வித வழிபாடாற்றுவதை நோக்க பெருவியப்பெய்துவதோடு அதைப்பற்றி நன்றி பாராட்டுகிறேன்.

ஞா:—அப்படியன்று. சிறியேங்கள் முன் செய்த பெரும் பேற்றால், தாங்களீங்கெழுந்தருளப் பெற்றும், அதனையறியாது யாங்கள் புரிந்த குற்றத்தைப் பொறுத்து மறத்தைப் போக்கியருளும்படி போற்றுகின்றோம்.

தி:—அறியாதியற்றிய குற்றங்கட்குப் பழியில்லை யல்லவா? ஆகலின், அதைப் பற்றி வருந்தற்க.

ஞா:—பெருந்தகையீர்! அறிந்தியற்றிய குற்றங்கட்குக் கழுவாய் கிடையாதென்றும், அறியாதியற்றிய பழிகட்குக் கழுவாயுண்டெனறு மன்றோ மறைகள் முறையிடுகின்றன.

தி:—ஆமாம்.

ஞா:—அப்படியிருக்கத் தாங்கள் அறியாதியற்றியவற்றிற்குப் பழியில்லையென்பது யாங்ஙனம்? எங்கட்கு ஆறுதல் கூறினீர்கள் போலும். ஆகவே, தாங்கள் சிறியேங்கள் அறியாதியற்றிய குற்றத்திற்குத் தகுந்த கழுவாய் கூறி கடைத்தேற்ற வேண்டும்.

தி:—மாதர்காள்! மறையினிடத்து குற்றங்களையும், அதற்குரிய கழுவாய்களையும் பல்லாறாக விரித்திருப்பினும், யான் எவ்வகை அறியாது செய்த குற்றங்கட்கும் பொருந்தும்படியானதும், மறையினுட்கருததும் ஆகிய கழுவாயைக் கூறுகின்றேன்:—

எவனொருவன் எக்குற்றங்களை யறியாது செய்தாலும், குற்றஞ் செய்தவன் குற்றஞ் செய்யப்பட்டவனிடத்தில் மன்னிபபுக் கேட்டுக்கொண்டு அவனை மகிழ்விப்பதே சிறந்த கழுவாயாம்.

ஞா:—அடிகாள்! தாங்கள் கூறியது சாலச் சிறந்ததே. ஆனால், ஒருவன், ஒருவனுக்கு அறியாது தீங்கு செய்து விடுகிறான். அதன் பின் தீங்கு செய்தவன் சில நிகழ்ச்சிகளால் தீங்கு செய்யப் பட்டவனைக்கான முடியவில்லை. அன்றி, தீங்கு செய்யப்பட்டவன் அத்தீங்கினால இறந்துவிடுகிறான். அவ்விடங்களில் தீங்கு செய்தவன் தன்னுடைய கழுவாயைத் தாஙகள் கூறியவாறு எவ்வணம் நிறைவேற்றுவான்?

தி:—குழந்தாய்! உன் பெயரென்ன?

ஞா:—அடியாள் பெயர் ஞானரத்தினம்.

தி:—ஆ! ஆ! நன்று! நன்று! ஞான***** ரத்தினமா? நன்கு வினவினை! அவ்விடங்களிற்றான் எம்பிரானாகிய மன்றவாணனிடத்து மன்னிப்புக் கேட்கவேண்டும். ஆனால், தீங்கு செய்தவன், செய்யப் பட்டவனைக் காணும் முன் இறப்பின்,' என வெளிப்படையாக வினவின், அவன் மறுபிறப்பிற்றான் மன்னிப்புக் கேட்கவேண்டும். இது பற்றி யல்லவா சென்ற பிறப்புக்களிற் செய்த குற்றங்கட்கு இப்பிறப்பிற் கடவுளிடத்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வதும்.

சுந்தரப் பெருமான் மாட்சியைக்கண்டு தெளியும் பொருட்டு, ஏழு முகில்களையும் மதுரையை அழிக்கும்படி ஏவினன். அதனைக் கண்ட பாண்டியன் வருந்தி எம்பிரானை வேண்ட, பெருமான் அருள் கூர்ந்து தன் முடிமிசை வதிந்துள்ள நான்கு எழிலியையும் போக்கி யழியா வண்ணங் காத்தனர். இது பற்றியே மதுரைக்கு நான்மாடக் கூடல் என்ற பெயர் வந்ததுஉம்.

ஞா:—முற்றறிவுடையீர்! பொருள் விளங்கப் பெற்றது. இனிச் சிறியேம் செய்யவேண்டிய கழுவாயைச் சிறிது விளக்கமாகச் செப்பியருளக் கோருகின்றேம்.

தி:—குழந்தாய்! நீங்கள் செய்த குற்றத்திற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர் தான் கழுவாய் செய்து முடிக்கப் பட்டதுவே. இன்னுமேன் வருந்துகின்றீர்கள்?

ஞா:—பெரியீர்! தங்கள் விருப்பம்.

தி:—ஏது இன்று மழை எம்பிரான் அருள் வெள்ளம்போற் பொழிகின்றது?

ஞா:—அடிகாள்! தங்களைப்போன்ற பெரியோர்களை வருத்துகின்ற இம்மழையை எம்பிரான் அருள் வெள்ளத்திற் கொப்பிடுதல் எங்ஙனம் பொருந்தும்?

தி:—அன்று; அப்படியன்று. இனிய பொருள்கள் சிலர்க்குச் சுவையுடையனவாய், சிலர்க்கு கைத்திருப்பது அவற்றின் குற்றமன்று; அருந்துவோரின் நாவினது குற்றமேயாம். அதுபோல, இம்மழை எம்போன்றார் சிலரை வருத்தி வாட்டுவது எங்கள்பாலுள்ள பழவினைப் பயனன்றி, அதன் குற்றமன்று. ஆகவே, எம்பிரான் அருள் பழியாளர் பலரை வருத்தி (பழியினின்றும் நீங்கச் செய்து), பெரியோர் பலரைக் காக்குமாறு போல், இம்மழையும் எம்போன்றாரை வருத்திப் பலரைக் காக்குமாற்றான் இரண்டுந் தம்முள் ஒக்கும். இது பற்றியே பொய்யா மொழியாரும்,

"வான் நின்று உலகம் வழங்கி வருதலான்,
தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று."

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி,
துப்பார்க்குத் துப்பாயதூஉம் மழை."

"கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய் [மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை."

"சிறப்பொடு பூசனை செல்லாது, வானம்
வறக்குமேல்; வானோர்க்கும் ஈண்டு."

எனப் பலவாறாக அதன் இன்றியமையாமையை விளக்கிச் சென்றார்.

ஞா:—அடிகாள்! நேரமோ மூன்றாம் யாமத்தின் முதற்பாதியாக விருக்கின்றது. மழையோ விரைவில் நிற்பதாகத் தோன்றவில்லை. ஊழி வேலைபோலெங்கும் ஒடுக்கம் பரவியுள்ளது. இவ்வேலை, தாங்கள் விழித்திருப்பின், தங்கள் திருமேனிப் பாங்கிற்கு ஏதேனும் இன்னல் உண்டாகுமெனநினைக்கின்றேன். ஆகையால், அருள்புரிந்து சிறிது கண்வளரக் கோருகின்றேன்.

தி:—குழந்தாய்! நன்கு செப்பினை! "உத்தமம் சுயார்சசிதம், மத்திமம் பிதுரார்ச்சிதம், அதமம் ஸ்ரீதனம், அதாமதமம் பரான்னம், பரக்கிருகவாசம்," என ஆன்றோர் இகழ்ந்து கூறிய பரான்ன பரக்கிருக வாசத்தை யடைந்த கடையேற்கு பரககிருக நித்திரையும் வேண்டுமோ? நன்று! நன்று!

ஞா:—பெரியீர்! தங்கள் விருப்பம் போற் செய்தருள்க. ஆனால், இன்று நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைக்குந்தோறும் நெஞ்சந் துடிக்கின்றது. இன்று இம்மழை சிறியேங்கட்குத் தீங்கு விளைக்கவே வந்ததுபோலும்.

தி:—பெண்மணி! வருந்துதலொழிக. பூவினிகழு மெச்செயலும் எவ்லாம்வல்ல எம்பிரான் அருளாலன்றி வேறுவகையான் நடக்கற்பாலதன்று.

"ஒன்றை நினைக்கின், அது வொழிந்திட்டு [ஒன்றாகும்;
அன்றி, யதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
எனையாளும் ஈசன் செயல்."

என்பது மூதுரை யன்றோ?

ஞா:—அடிகாள்! பலவித கெட்ட செயல்களை விரும்பியவாறு செய்து வீணராய்த் திரியும் பழியாளர் யாவரும் யாதொரு வருத்தமுமின்றி வாழ்வதும், தங்களைப்போன்ற சான்றோர்கள் இன்று நிகழ்ந்தது போன்ற நிகழ்விற் காட்படுவதும் கடவுள் செயலென்றால் எங்ஙனம் பொருந்தும்?

தி:—குழந்தாய்! யாவும் எல்லாம் வல்லான் செயலேயாம். எவ்வாறெனின், ஒரு தந்தைக்குப் பல குழந்தைகள் நல்லரும, பொல்லருமாக இருப்பதாக வைத்துக் கொள்வோம். பொல்லாக் குழந்தைகள், ஏதேனுஞ் சிறிய குற்றஞ்

செய்யின், அஃதவர்களி னியற்கை யெனக் கண்டுங் காணுததுபோ லிருந் துவிடுகிறுன். நற்குழந்தைகள் எந்த குற்றமுஞ் செய்யாதிருப்பினும், அவர் களை அந்நல்வழியில் நிலையாக நிறுத்த வேண்டிப் பலவித ஆராய்வுகளால் ஆராய்ந்து, தவறின் நல்லறிவு புகட்டு கிறுன். அதுபோல் பழியாளரின் செயல்களை அவர்களி னியற்கையென வாளா விடுத்து, அடியார்கள் நன்கு நடப்பினும், அவர்களைப் பலவித வா ராய்வுகளால் ஆராய்ந்து, தவறியவிடத் துத் தோன்றுத் துணையா (மனச்சாட்சி ரூபமா)க வந்து அறிவு புகட்டி, நல்வழி யுய்ப்பான். ஆகையாற் பொருந்தும்.

(தொடரும்) தொண்டர்தந் தொண்டன்.

மாணவர் பக்கம்

தொடக்கக் கல்வி

(கஉரு-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர்க்கு உடற்பயிற்சி செய்யச் செய்வதால் உடலுறுப்புகள் வன்மை பெற்றும் கழிவு பொருள்கள் வியர்வை யாக வெளிப்பட்டும் அவர்கட்கு உடற் செழுமை யுண்டாகு மாதலின் இளை யோர்களை விளையாட்டுத் தோட்டத்துக் கழைத்துப்போய் பிள்ளைகளின் உயரத் துக்குத் தக்கபடி வரிசையாய் நிற்க வைதது 'வலப்புறம் திரும்பு' என்று

உடற்பயிற்சி. பக்கங்களில் திரும்புதல்.

ஆளுங் குரலோசை யோடு கூறி யவர்களை அவர் தம் வலக்கைப் புறம் முகம் உடல் திரும்பி நிற்கும் வண்ணம் திரும்புமாறு சொல்லிக் கற்பிப்போன் அவ்வழி காட்டி யவ்வழி செய்யும்படி செய் தும் 'முன்புறம் திரும்பு' என கற்பிப் போர் எதிராக திரும்பும்படியும் 'இடப்புறம் திரும்பு' என்று கட்டளை யிட்டு அவர் தம் இடக்கைப்புறம் அவர் தம் முகம் உடல்களைத் திரும்பி நிற்கும் படி ஒரே காலத்தில் அவர்களைத் திரும் பச் செய்தும் முன்னேபோல் 'முன் புறம் திரும்பு' என்ற கட்டளையால் கணக்காயர் தம் முகம் பார்த்து நிற்கு மாறு திரும்பச் செய்தல்; 'பின்புறம் திரும்பு என்பதால் அவாகள் தமது பின் பக்கம் ஆசிரியர் பக்க மிருக்கும்படி யாய் வலப்புறமாகவே திரும்பி நிற்றல் வேண்டு மென்பதையு மறிவித்து திரும் பச் செய்தல். இவ்வாறுக அவர்களை வலம், இடம், முன் பின் ஆக திரும்ப வும் வலம் இடமாக அவர்கள் திரும் பும் முதல் திருப்பததிலேயே முன்னுள் ளவன் கழுத்துக்கு நேராகப் பின்னுள் ளவன் முகமிருக்கும்படி யிப்படி வரிசை முற்றும் நோக்கி நிற்கச் செய்தால் வரி சை யொழுங்காய் ஏற்படு மானதால் அவ்வகை நிற்கச் செய்து பின் திரும் பும் பயிற்சிகளைச் செய்விக்க வேண்டும். இங்ஙனம் சிலமுறை யவர்கள் திரும்பு வது முடிந்தபின் வலப்புறந் திரும்பச் செய்து 'நட' என்று

நடத்தல்.

கூறி நேராக நடந்து செல்லச் செய்தல்.

எந்த பக்கம் அவர்கள் மடங்கித் திரு ம்பி நடக்க வேண்டுமோ அப்பக்கம 'வளைக' என்பதால் அப்பக்கம் வளைந்து நடக்கவும் அஃதாவது 'வலப்பக்கம் வளைக' 'இடப்பக்கம் வளைக' என்பவற்

வளைந்து திரும்புதல்.

றுல் அவ்வப்பக்கங் களில் வளைந்து நட ந்து போம்படியும் 'நிற்க' என்பதால் அப்படியே வரிசை யாய் நிற்கவும் செய்தல். 'கால் அடி தட் டுக' என்பதால் அவர்கள் நின்ற நிலையி லேயே இடது அடிகளை முதலிலும் வலககாலடிகளைப் பின்னரும் தரையில் இடம் வலம் என்று சொல்லிக்கொண்டே

காலடி தட்டுதல்.

அவ்வவ்வோசைக்குரிய அடிகளைத் தரையில் தட்டுபட செய்தும் நட என்று கூறி அங்ஙனமே தட்டிக்கொண்டே வாயால் இடம் வலம் என்று கூறிக்கொண்டே நடத்தலும் செய்வித்தலாம். பிள்ளைகள் அறியுமாறு கற்பிப்போர் செய்து காட்டுதல் சிறந்ததாம்.

இன்னணம் சிறுவர்கட்கு திரும்புதலும் நடத்தலும் கைவந்தபின் பிள்ளைகளை வரிசையாய் நிற்கும்படி செய்து ஒன்று, இரண்டு என்று பிள்ளைகளை முதலிலிருப்பவன் ஒன்று என்னவும் அடுத்தவன் இரண்டு என்னவும், அதற்கடுத்தவன் ஒன்று, அதற்கடுத்தவன் இரண்டு என்ன கடைவரையில் சொல்லச்செய்து அவரவர் எண்களை நினைவில் வைக்கச்சொல்லி, இரண்டு சொன்னவர்கள் எல்லாரும் நேராக இரண்டடி முன்னேபோய் நிற்குமாறு 'இரண்டு சொன்னவர்கள் இரண்டடி முன்னே போக' என்று கூற அப்படியே பிள்ளைகளில் இரட்டையெண்ணுளர் இரண்டடி முன் சென்று நிற்கச் செய்தல் பின்னர் பக்கங்களில் திரும்பும்படி கட்டளைகளிட்டு முடித்து வரிசை தீர்த்தபின் 'முதற்பயிற்சி' முதற் பழக்கம் பக்கங்களில் கையுயர்த்தல் என்று கூறி, பிள்ளைகளை நோக்கி ஒன்று என்றவுடன் தத்தங் கைகளை அவ்வப் பக்கங்களில அவரவர் தம் தோட்களுக்கு நேராக நிற்கும்படி

கைப்பழக்கம் பக்கங்களில் உயர்த்தல்.

கீழே தொங்கியிருந்தவற்றை உயர்த்தியும் இரண்டு என்றவுடன் தலைகட்கு மேலே யுயர்த்தியும், மூன்று என்றவுடன் தோள் மட்டத்திற்கு இறக்கி நிறுத்தியும், நாலு என்றவுடன் பழையபடி கீழே யிறக்கித் தொங்கவிட்டவுடன் வலப்பக்கம் திரும்பி நிற்கச் செய்யவேண்டும். இப்படியே ஒவ்வொரு பக்கத்தும் ௧, ௨, ௩, ௪ என்று சொல்லிக் கைகளை யுயர்த்தி தாழ்த்தி திரும்பி முதலிருந்த பக்கம் நிலையாக நிற்கவேண்டும். இரண்டாம் பழக்கம் கைகளை தத்தம் எதிராக உயர்த்தலைக் கற்பித்துச் செய்விக்கவேண்டும். ௧-என்றவுடன் கைகளைக் கீழிருந்து உயர்த்தி அவரவர் முகம் நோக்கும் பக்கம் நீண்டு தோள் மட்டத்தே நிற்கவும், ௨-என்றவுடன் அங்கிருந்து தலைக்கு மேலே உயர்ந்து நிற்கவும், ௩-என்ற

கைப்பழக்கம் எதிராக உயர்த்தல்.

வுடன் அப்படியே தோள் மட்டத்தே யிறங்கவும், ௪-என்றவுடன் கீழே தொங்கவும் அஃதோடு வலப்புறம் திரும்புதலும் இப்படி ௧, ௨, ௩, ௪ என்று கூறிக்கொண்டு கைகளையுயர்த்தும் பழக்கங்களைச் செய்து வலமாகவே திரும்பி திரும்பி பழையபடி நிலையில் நிறகச் செய்தல் வேண்டும். மூன்றாம் பழக்கம் ௧-என்றவுடன் பக்கங்களில் கைகளைத் தோள்மட்டம் உயர்த்தியும், ௨, ௩-என்னும் வரையில் கைகளை வீசி சுழற்றியும், ௪-என்றவுடன் கீழே தொங்கவிட்டும் வலப்புறம் திரும்பியும் இப்படியே முதல் நிலையில் நிற்கும் வரையில் இப்பழக்கத்தைச் செய்வித்தல் வேண்டும். பின்னர் 'இரண்டாம் பயிற்சி' முதல் பழக்கம் பக்கங்களில் தலை சாய்த்தல் பழக்கத்தைச் செய்விக்க; ௧-என்றவுடன் பிள்ளைகள் தத்தம் தலைகளை வலப்புறம்

தலைப் பழக்கம் வலப்புறம் சாய்த்தல்

சாய்த்தல், ௨-என்றவுடன் நிமிர்த்தல், ௩-என்றவுடன் தாழ்த்தல், ௪-என்றவுடன் முன்போல் நிமிர்த்தல் செய்தவுடன் வலப்புறம் திரும்பி நிற்கச் செய்தல். இங்ஙனமே ௧, ௨, ௩, ௪ என்றபடியே தலைகளைச் சாய்த்தும் நிமிர்த்தியும் தாழ்த்தியும் நிமிர்த்தியும் வலமாகத் திரும்பி திரும்பி தலைப் பழக்கங்களோடு முன் நின்ற நிலையிலிருக்கச் செய்தல்.

(தொடரும்)

சோழ. ச. சச்சிதானந்த முதலியார்
Second Assistant,
Corporation School,
Choolai, Madras.